விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 28 சனிக்கிழமை (12.03.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 083

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து



## ஜப்பானை அடுத்தடுத்து தாக்கியது சுனாமி

## அதிர்ந்தது நிலம்; உருண்டன வாகனங்கள்

### 300 பேரின் சடலங்கள் மீட்பு; சொத்துக்களுக்கு பெரும் சேதம்

(செண்டாய்)

ஜப்பானில் பதிவுகள் ஆரம்பித்த காலத்திலிருந்து இதுவரை இல்லாத மிகக் கடுமையான பூகம்பம் ஒன்று ஏற்பட்டுள்ளதை அடுத்து அந் நாட்டின் வடகிழக்கு கரையோரப் பகுதியை பல மீற்றர் உயரமுடைய சுனாமி அலைகள் தாக்கியுள்ளன. கரையோர நகரான செண்டாயில் 300 வரையான சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் பலரைக் காணவில்லை என்றும் பொலிஸார் கூறுகின்றனர். கரிய நிறத்தில் கடல் பெருந்திரளாகப் புகுந்து கார்கள், வீடுகள், படகுகள் போன்றவற்றை நிலத்துக்குள் நெடுந்தூரம் இழுத்துவந்து பின்னர் அலை பின்வாங்கிய போது எல்லாமும் கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்டதை தொலைக்காட்சிப் படங்கள் காட்டியுள்ளன. ரிக்டர் அளவையில் 8.9 புள்ளியை இந்த நிலநடுக்கம் கொண்டிருந்ததாக அமெரிக்க நிலவியல் ஆய்வுக் கழகம் கூறுகிறது. (20ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளை வைத்து பூச்சாண்டி காட்டுகிறது அரசு!

### ஐக்கிய தேசியக் கட்சி கிண்டல்

(கொழும்பு)

தமிழகத்தில் விடுதலைப்புலிகளின் மூன்று முகாம்கள் இரகசியமான முறையில் இயங்கி வருவதாக பிரதமர் டி.எம். ஜயரட்ண அண்மையில் நாடாளுமன்றத்தில் வெளியிட்ட தகவல்கள் மக்களைத் தவறாக வழிநடத்தும், புனையப்பட்ட கதை என ஐக்கிய தேசிக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

இல்லாத பூச்சாண்டியை உருவாக்கிக் காட்டி உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றி பெறவே அரசாங்கம் முயற்சித்து வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்திய அரசாங்கத்துடன் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளாமல், இவ்வாறான விடயங்களை வழமையான நடைமுறைகளின்படி பின்னறிவிப்புக்கள் எதனையும் மேற்கொள்ளாது உள்ளூராட்சித் தேர்தல் தனக்குச் சவாலாக அமையும் என்பதால் அரசாங்கம் இந்தக் குற்றச்சாட்டை சுமத்துவதற்கான காரணம் எனவும் அவர் கூறியுள்ளார்.

மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்காமல் இல்லாத விடயங்களை இருப்பதாக புனைகதைகளை கூறி மக்களின் கவனத்தை வேறுபக்கம் திசைதிருப்பியுள்ளது.

நாட்டில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, தொழில் வாய்ப்பின்மை, மனித உரிமைகள் மீறப்படுகின்றமை, சட்டத்தை மீறுதல், கல்வி, சுகாதாரம், போஷாக்கின்மை என காணப்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கு பதிலளித்த இந்த அரசாங்கத்தின், கம நெகும (கிராம அபிவிருத்தி), மக நெகும (வீதி அபிவிருத்தி) போன்ற அபிவிருத்தித் (20ஆம் பக்கம் பார்க்க)

## 'சொன்னது தவறு' பிரதமர் வருத்தம்



(கொழும்பு)

தமிழ்நாட்டில் தமிழீழ விடுதலை புலிகளின் இரகசியப் பயிற்சி நிலையங்கள் இயங்குகிறது என சில பத்திரிகைச் செய்திகளின் அடிப்படையிலேயேதான் நாடாளுமன்றத்தில் கூறியதாகவும் அச்செய்திகள் தவறானவையென பின்னர் தெரியவந்துள்ளதாகவும் பிரதமர் டி.எம்.ஜயரட்ண கூறியுள்ளனர்.

தமிழகத்தில் விடுதலைப்புலிகளின் பயிற்சி நிலையங்கள் செயற்படுவதாக பிரதமர் கூறியதை இந்தியா நிராகரித்தமை குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழ் நாட்டில் தமிழீழ விடுதலைப்புலிகளின் முகாம்கள் இருப்பதாக பிரதமர் டி.எம். ஜயரட்ண கூறியதை இந்தியா நிராகரித்தமை குறித்து இலங்கை அரசாங்கம் மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

இந்திய மண்ணில் விடுதலைப் புலிகளின் முகாம்கள் இல்லை யென்ற நிராகரிப்பானது இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவைப் பலப்படுத்துகின்றது என இளைஞர் விவகாரத்திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

பிரதமரால் வெளியிடப்பட்ட பிழையான அறிவிப்பானது, அது தவறானது என ஏற்றுக் கொண்டுள்ளதால் ஒரு முடிந்துபோன விவகாரம் ஆகும் எனவும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும கூறினார். (ச–5)

## முஸ்லிம் மக்களின் உண்ணாவிரதம் முடிபு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மீள் குடியேற்றப்பட்டுள்ள முஸ்லிம்களுக்கு அரசாங்கத்தினால் எந்தவித அடிப்படை வசதிகளும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்து, மீள் குடியேறிய முஸ்லிம்கள் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் மேற்கொண்ட சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை முடிபுக்கு வந்தது.

யாழ்ப்பாணப் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. சபையுடன் இரகசிய உறவு இறையாண்மைக்கு அச்சுறுத்தல்

### ஜே.வி.பி. எச்சரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனுடனும் பாதுகாப்புச் சபை ஆலோசகர் விஜய் நம்பியாருடனும் அரசினால் மேற்கொள்ளப்பட்ட இரகசிய சந்திப்புக்கள் நாட்டின் இறையாண்மைக்கு பாரிய அச்சுறுத்தலான விடயம் என்பதுடன் பல சந்தேகங்களையும் தோற்றுவித்திருப்பதாக ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது,

அரசாங்கத்தின் இரட்டைவேடம் ஐ.நா. சபையுடனான சந்திப்பின் பின்னர் வெளிச்சமாகியுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கைதிகளை சந்தித்து ஜே.வி.பி. எம்.பிக்கள் பேச்சு

(கொழும்பு)

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் நேற்றுக் காலை நியூ மகசின் சிறைச்சாலைக்குச் சென்று தமிழ் அரசியல் கைதிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்தனர்.

அதன்போது தமிழ் அரசியல் கைதிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட அவர்கள் தென்பகுதியில் உள்ள சிங்கள மக்களிடமும் தமிழ் அரசியல் கைதிகளின் அவலநிலை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களின் விடுதலைக்காகப் போராடப் போவதாகவும் தெரிவித்தனர்.

இச் சந்திப்பில், பிணையிலாவது விடுதலை செய்ய அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும், (20ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரன் கேட்ட உரிமைகளே பிரச்சினை தீர்வுக்கு பேசப்படும்

### கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினை என்பது கடந்த 60 வருடங்களுக்கு மேலாக இருந்து வருவது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட பிரபாகரன் முன்வைத்த கோரிக்கைகளையே கேட்பார்கள். எதிர்காலத்தில் தமிழ் மக்கள் சார்பாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் எவரும் பிரபாகரன் கேட்ட உரிமைகளையே கேட்பார்கள். அதைத் தவிர வேறு மார்க்கம் இருப்பதாகத் தெரியவில்லை.

இவ்வாறு நவ சம சமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரம்பாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார். பிரபாகரன் கேட்ட எதனையும் தமிழ் மக்களுக்கு வழங்க முடியாதென ஜனாதிபதி அண்மையில் தெரிவித்த கருத்து தொடர்பாக (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு இதயஞ்சலிகள்

12/03/2011



## அமரர் சின்னையா புலேந்திரன்

(இளைப்பாறிய C.T.B. சாரதி)

'ரஜனி மகால்' ஸ்ரேசன் வீதி, சுன்னாகம்.

இறுதிவரை எம்மோடு இணைந்திருப்பீர் என்றிருந்தோம்
இடைநடுவில் தவிக்கவிட்டு ஏனப்பா சென்றீர்கள்?
கருவறைக்குள் கருக் கொண்டபோதே
மரணம் என்பது மறைக்கப்படவில்லை- ஆனால்
மனதைப் பிழியும் மரணங்கள்
வாழ்வில் இயல்பையே- இடிவிழுத்திச் செல்கின்றன
உங்கள் மரணம் கூட
உணர்வுக்குள் உரைக்கப்பட முடியாமல்
உள்ளத்தை உருக்குவதை யாருக்கு உரைப்போம்
போரின் பிடியில் வன்னியில் இருந்து உங்கள்
அன்பு மகளுடன் திரும்பி வந்தேன்- ஆனால்
உங்கள் திருமுகம் காணமுடியவில்லை- அப்பா
இடிவிழுந்துபோனது எம் இதயம்
மறுபிறவி என்பது மானுட உண்மையென்றால்
மறுபடியும்- பிறந்திடுங்கள் எங்களுடன்

என்றும் உங்கள்
**சிவாஸ்தம்பி**

(4015) உரிமையாளர்: லக்சிகா ரவல்ஸ், மல்லாவி.

## விரிவுரைகளின் ஆரம்ப நிகழ்வு

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தினால் நடத்தப்படும் முகாமைத்துவப் பட்ட கற்கை நெறி 2011/2012 கல்வியாண்டுக்கான ஆரம்ப வைபவ நிகழ்வுகள் இன்று காலை 9.30மணிக்கு இடம்பெறும்.இக் கற்கைநெறிக்கு பதிவு செய்த மாணவர்கள் அனைவரும் இவ் வைபவத்தில் கலந்து கொள்ளும்படி யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தினால் நடத்தப்படும் தொழிலுரிமைத்துவமும் சிறுவணிக முகாமைத்துவமும் கற்கை நெறி 2010/2011 கல்வியாண்டுக்கான அதிதி விரிவுரையாளர் நிகழ்வுகள் நாளை காலை 9.30மணிக்கு இடம்பெறும் என யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். ஓ

Study & Work in UK and Canada

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation



என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

வர்த்தகப் பெருமக்களே...

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290

அலுவலக உதவியாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் ஓர் தனியார் நிறுவனத்திற்கு பின்வரும் தகைமைகள் உடைய அலுவலக உதவியாளர், அலுவலகத்தை நிர்வகிக்கவும், பராமரிக்கவும் உடனடியாகத் தேவைப்படுகின்றார்.


- கல்வித்தகைமை –O/L ஆங்கிலத்தில் சித்தி, கணனி அறிவு–(Ms office)
- Photo shop, தமிழ் தட்டச்சு என்பன மேலதிக தகைமைகளாக கொள்ளப்படும்.
- ஆண்கள் விரும்பத்தக்கது.
- பயிலுவதற்கான ஆர்வமும் நெகிழ்ச்சித் தன்மையும் இயல்பாகவே இருத்தல் விரும்பத்தக்கது.
- அனுபவம் எதிர்பார்க்கப்படவில்லை.

தங்களது விண்ணப்பங்களை 16.03.2011ம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு தபாலிலோ, Email இலோ அனுப்பிவைக்கவும்.

Educational Consultancy (PVT) Limited
64, Kanagaratnam Road, Ariyalai, Jaffna.
email:- mail@V4edu.com 0773867257
(சி-2698)

# மரண அறிவித்தல்

## அமரர் இராமலிங்கம் திருவாதிரை



(முகாமைத்துவப் பணிப்பாளர் ஸ்ரீ திருப்பதி (பிறைவேற்) லிமிடெட்)

முன்னாள் யாழ்ப்பாணம் திருப்பதி ஸ்டோர்ஸ் உரிமையாளரும், இல.130,4ஆம் குறுக்குத்தெரு கொழும்பு 11, ஸ்ரீதிருப்பதி (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபகரும், காரைநகர் பலகாடு இராமலிங்கம் பாக்கியம் தம்பதிகளின் புதல்வரும் வலந்தலையைச் சேர்ந்த தில்லையம்பலம் இராசம்மா தம்பதிகளின் மருமகனும் ஆகிய இராமலிங்கம் திருவாதிரை அவர்கள் 10.03.2011 வியாழக்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் இரத்தினேஸ்வரியின் அன்புக்கணவரும், செந்தமிழ்ச்செல்வி, சாந்தி, இராஜராஜன், இரஞ்சினி, இராமகிருஷ்ணன் ஆகியோரின் அன்புத்தந்தையும், க.உருத்திரசிங்கம், க.சண்முகலிங்கம், ஸ்ரீஷயானா, சி.கலாதரன், சுமித்திரா ஆகியோரின் அன்பு மாமானாரும், நிவேதிகா, இராசாராம், யசோதை, துளசி, பானுமதி, சங்கவி, வசீகரன், சத்யா, சக்தி ஆகியோரின் அன்புப்பேரனும், நாகரத்தினம், கணேசமூர்த்தி, பரமேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், லோகாம்பிகை, இராஜேஸ்வரி, அமரர் கு.சிவஞானம் மற்றும் குகதாசன், அமரர்கள் சிவசம்பு, தேவராஜா, தர்மலிங்கம் மற்றும் விஸ்வலிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 14.03.2011 திங்கட்கிழமை காலை 9.00மணியளவில் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று முற்பகல் 11.00மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

– குடும்பத்தினர்.

இல.70-1-1 புதுச்செட்டித்தெரு,
கொழும்பு-13

தொலைபேசி – 2423997, 0777671151

(சி-2679)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011
பெப்ரவரி 19 - ஏப்ரல் 02
ICC Cricket World Cup 2011

# தென்னாபிரிக்க அணியை சமாளிக்குமா இந்தியா?

## நாக்பூரில் இன்று சமர்

(நாக்பூர்)

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இன்று நாக்பூரில் நடைபெறும் லீக் போட்டியில் இந்தியா-தென்னாபிரிக்கா அணிகள் மோதுகின்றன.

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெற்றுவருகிறது.



இதில் நாக்பூரில் இன்று நடைபெறும் 29ஆவது லீக் போட்டியில் பி பிரிவைச் சேர்ந்த இந்தியா-தென்னாபிரிக்க அணிகள் மோதுகின்றன.

இந்திய அணி தான் விளையாடிய 4 ஆட்டங்களில் 3 வெற்றியையும் ஒரு ஆட்டத்தில் சமனிலையும் அடைந்தது.

இன்றைய ஆட்டம் இந்திய அணியின் செயற்பாடுகள் எப்படி இருக்கும் என்பதை கணிக்கும் வகையில் இருக்கும்.

தற்போதைய நிலையில் இந்திய அணியின் துடுப்பாட்டம் மட்டுமே வலுவாகவுள்ளது. அதுவும் நெதர்லாந்து அணியுடனான போட்டியில் ஆட்டம் கண்டது. ஆரம்பத்தில் சேவாக்- டெண்டுல்கர் ஜோடி சிறப்பான ஆட்டத்தை வழங்கினால் அதன் பின்னர் கள மிறங்கும் வீரர்கள் நெருக்கடி இல்லாமல் ஓட்டங்கள் குவிக்கலாம்.

யுவராஜ் சிங் மீண்டும் பிரகாசிக்க ஆரம்பித்துள்ளமை இந்திய அணிக்கு பலம். எனினும் காம்பீர், யூசுப்பதான் ஆகியோர் தொடர்ந்து சொதப்பி வருகின்றனர்.

அணித்தலைவர் தோனியும் இதே நிலையில்தான் உள்ளார். இவர்களும் துடுப்பாட்டத்தில் பிரகாசித்தால் இந்திய அணி முத்திரை பதிக்கலாம்.

பந்து வீச்சில் சகீர்கான் மட்டுமே மிரட்டுபவராக உள்ளார். அவ ருக்கு பக்கபலமாக யுவராஜ்சிங் சுழல் பந்தில் அசத்து கிறார். முனாப் பட்டேல், நெகரா, ஆகியோர் கைகொடுத் தால் தென்னாபிரிக்க அணிக்கு நெருக்கடியாக அமையும்.



தென்னாபிரிக்க அணி, இங்கிலாந்து அணிக்கு எதிராக அதிர்ச்சித் தோல்வி அடைந்தது.

தென்னாபிரிக்க அணி 3 ஆட்டத்தில் விளையாடி 2 வெற்றி ஒரு தோல்வியைப் பதிவு செய்துள்ளது. காலிறுதிக்கு முன்னேறும் முனைப்பில் அந்த அணி இன்றைய ஆட்டத்தை எதிர்கொள்கிறது.

டிவில்லியர்ஸ், அம்லா துடுப்பாட்டத்தில் நல்ல நிலையில் உள்ளனர். இவர்கள் இந்திய பந்து வீச்சாளர்களுக்கு சிம்ம சொர்ப்பனமாக இருப்பார்கள். சிமித், டுமினி, கலிஸ் ஆகியோர் இணைந்து மிரட்டினால் நல்ல ஓட்ட எண்ணிக்கையை எட்டலாம். சுழல் பந்துவீச்சாளர் இம்ரான் தாகிர் காயம் காரணமாக இன்றைய ஆட்டத்தில் பங்கேற்கவில்லை.

இது தென்னாபிரிக்க அணிக்கு சற்று பலவீனத்தை ஏற்படுத்தும். இன்றைய போட்டியில் இம்ரான் தாகிருக்குப் பதிலாக மிதவேகப் பந்து வீச்சாளர் சொற்சோபே களமிறங்கப்படுவார்.


சமீபத்தில் நடந்த தொடரில் சொற்சோபேயின் பந்து வீச்சில் இந்திய அணியின் முன்னணி வீரர்கள் பலர் தங்களது விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தனர்.

இதனால் சொற்சோபே முக்கிய பங்கு வகிப்பார். அவருடன் வேகத்தில் மிரட்ட ஸ்ரையன், மோர்கல் தயாராக உள்ளனர். சுழல் பந்து வீச்சில் பீற்றர்சன், போத்தா சவாலாக இருப்பார்கள்.

கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஓர் நற்செய்தி!
MCS இன் ஒரு மில்லியன் ரூபா பரிசை வெற்றிகொள்ள உங்களுக்கு அரிய சந்தர்ப்பம்
தினமும் 5 பேருக்கு
50ஆயிரம் ரூபா வீதம் 100 பேருக்கு
ஒரு மில்லியன் வெற்றிகொள்ளும் வாய்ப்பு
வலம்புரியில் கேட்கப்படும்
உலகக்கிண்ண கேள்விகளுக்கு
சரியான பதிலை அனுப்பி உங்கள் உயர்கல்வி வாய்ப்பை பெற்றுக்கொள்ளுங்கள்
கூப்பனை வெல்பவர் அல்லது அவரால் வழங்கப்படும் ஒருவர் பின்வரும் கற்கை நெறிகளுக்கு இப் பரிசுக் கூப்பனை பயன்படுத்த முடியும்
1. கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பட்டக் கற்கை நெறி
2. சீமா (லண்டன்) CIMA_UK
3. மைக்கிரோசொப்ற் நிறுவன கணினிப் பொறியியலாளர் கற்கை நெறி
4. அடோப் நிறுவனத்தின் மல்ரிமீடியா கற்கை நெறி

1. ..............................
2. ..............................
3. ..............................
4. ..............................
5. ..............................
6. ..............................
7. ..............................
8. ..............................
ஒலிம்பியா ஸ்போட்ஸ்
தொ.பே. 222 3490

இன்றைய கேள்வி?
பத்தாவது உலகக் கிண்ணத் தொடரில் போட்டியொன்றில் அதிக ஓட்டங்களைக் குவித்த வீரர் யார்?
..............................
சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 14.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு M.C.S வழங்கும் பரிசுக் கூப்பன்.
பெயர்:- ..............................
முகவரி:- ..............................
..............................
தொ.பே:- ..............................
தே.அ.அ.இல:- ..............................
அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.



உலகக்கிண்ண கிரிக்கெட்-2011
சம்பியனாகும் நாடு?..............................
தொடர் நாயகன் விருது யாருக்கு?..............................
சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 20.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.
பெயர்..............................
முகவரி..............................
தொலைபேசி..............................
தே.அ.அ.இல..............................
'உலகக்கிண்ணம்'
வலம்புரி
இல.3, 2-ம் ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

இன்னும் பல பரிசுகள்

Midea Electro Mart
No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.
ESPN
இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம்
52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
JAFFNA ELECTRICAL
94(6), Stanley Road, Jaffna.
Tel: 021 222 2353
Fax: 021 222 4302
E-mail:matheesan16@yahoo.com
SINGER-Manipay
Alady Junction, Manipay.
T.P.:021 225 5343
077 6139592
PCS PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD
305, Kasthuriyar Road, Jaffna.
T.P:021 2221101, 021 2229644
email:- pcsjaffna@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய சந்திகளில் மின்குமிழ்கள் பொருத்தப்படாமையால் சிரமம்

(கரவெட்டி)

வடமராட்சிப் பிரதேசத்தின் முக்கிய சந்திகளில் மின்குமிழ்கள் பொருத்தப்படாமையால் அப்பகுதி மக்கள் இரவு வேளைகளில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கரவெட்டி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளிலுள்ள முக்கிய வீதிகளுக்கே இவ்வாறு மின்குமிழ் பொருத்தப்படாமல் உள்ளது.

அத்துடன் பொருத்தப்பட்ட மின்குமிழ்களில் சில பழுதடைந்திருப்பதால் தொடர்ச்சியாக ஒளிராமல் உள்ளன.

இது தொடர்பாக உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-24)

# இளைஞர் சேவைகள் மன்றத்தின் 25 ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு வீட்டுத்திட்டம்



(குனங்கிளப்பு)

மகிந்த சிந்தனையின் அடிப்படையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று முன்தினம் நாடு பூராகவும் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுக்கும் ஒவ்வொரு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டது.

இதன் ஒரு கட்டமாக வடமராட்சிக்கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் ஜே/419 கிராம அலுவலர் பிரிவில் இராசையா ரதீஸ்வரன் என்பவருக்கான வீட்டுத்திட்டத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபம் மருதங்கேணி இளைஞர் பாராளு மன்ற உறுப்பினர் எஸ்.நிலோஜன் தலைமையில் இடம் பெற்றது.

இவ்வைபவத்தில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் நிர்வாக உத்தியோகத்தர் கணேசமூர்த்தி, சமுர்த்தி வங்கி முகாமையாளர் பிறேமராஜ், சமுர்த்தி உத்தியோகத் தர்கள் ரவிச்சந்திரன், தயாபரன் ஆகியோரும் அப்பிரதேச கிராம அலுவலர் தோமஸ் யூட் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-3-37)

# வடமராட்சி கல்வி வலய ஆங்கில தினப் போட்டிகள்

வடமராட்சி வலய ஆங்கில தினப்போட்டிகள் எதிர்வரும் 19, 20 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை பருத்தித்துறை கோட்டத்திற்கான ஆங்கில தினப்போட்டிகளின் வரிசையில் வாய்மொழி நிகழ்ச்சிகள் யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

மேலும் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கரவெட்டிக் கோட்டத்திற்கான ஆங்கில தினப் போட்டிகளின் வரிசையில் வாய்மொழி நிகழ்ச்சிகள் நெல்லியடி மத்திய மாக வித்தியாலயத்தில் நடைபெறும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

இதேவேளை இன்றும் நாளையும் நடைபெறவிருந்த போட்டிகள் மாணவர்கள் உடற் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்வதற்காக பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-19)

# பூம்புகார், அரியாலை பகுதிகளில் பெருகியுள்ள கால் நடைகள்

பூம்புகார் மற்றும் அரியாலை கிழக்கு பகுதிகளில் நூற்றுக்கணக்கான கால்நடைகள் பெருகிக் காணப்படுவதாக பூம்புகாரில் மீளக்குடியேறிய மக்கள் தெரிவித்துள்ளனர்.

மக்கள் இடம் பெயர்ந்தபோது கைவிடப்பட்ட பெருமளவான மாடுகளே அதிகரித்துக் காணப்படுவதாகவும் அறுவடை செய்யப்படாத வயல் நிலங்களை அவை சேதப்படுத்தி வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை மாடுகளை தடம் வைத்து கொலை செய்து இறைச்சிகளை திருடர்கள் அபகரிக்கும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

குறிப்பாக கட்டாக்காலியாக திரியும் மாடுகளில் பசு கன்று ஈன்றிருந்தால் அவற்றைப் பிடிப்பது திருடர்களுக்கு இலகுவாகக் காணப் படுவதால் நாளாந்தம் பசுமாட்டு இறைச்சிகள் கடத்தப்பட்டு வருவதாக தெரிய வருகிறது. (ஸ்ரீ-3-51)




# அனுமதிப்பத்திரமின்றி ஆடுகளை கொண்டு சென்றவருக்கு அபராதம்

(கரவெட்டி)

கொடிகாமப் பிரதேசத்தில் அனுமதிப் பத்திரமின்றி மோட்டார் சைக்கிளில் மூன்று ஆடுகளைக் கொண்டு சென்ற நபருக்கெதிராக கொடிகாமப் பொலிசாரினால் நேற்றைய தினம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

மேற்படி வழக்கை விசாரித்த நீதிபதி மணிக்கவாசகம் கணேசராசா, சந்தேக நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் 2 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் ஆடுகளை 10 ஆயிரம் ரூபா பிணை முறியில் எடுத்துச் செல்ல அனுமதித்தார்.

அத்துடன் மோட்டார் சைக்கிளை ஒரு இலட்சம் ரூபா பிணை முறியில் எடுக்க உத்தரவிட்டார். (ஸ்ரீ-3-24)

# கலந்துரையாடல்

அவையின் ஏற்பாட்டில் இலக்கியக் கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணிக்கு அல்வாய் கலை அகத்தில் எழுத்தாளர் தெணியான் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இசையும் சமூகமாற்றமும் ஓர் ஆக்க இசை அனுபவ தரிசனம் என்னும் பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன் உரையாற்றவுள்ளார். (ஸ்ரீ-3)

# மெய்வல்லுநர் போட்டி

பரு.மாதனை மெ.மி.த.க.பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கண்ணகி அம்மன் ஆலய மைதானத்தில் பாடசாலை அதிபர் க.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பருத்தித்துறைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பா.இரகுநாதன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-3-19)

# களவுகளில் ஈடுபட்டதாக கைதான சந்தேக நபர்கள் பிணையில் விடுதலை

கொடிகாமப் பகுதியில் இரவு வீடு புகுந்து களவுகளில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் கடந்த ஆண்டு யூலை மாதம் 15 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களுக்கான வழக்கு விசாரணை கடந்த 8 ஆம் திகதி சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகம் கணேசராசா முன்னிலையில் நடைபெற்றது.

வழக்கை விசாரித்த நீதிபதி மேற்படி சந்தேக நபர்களை தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான தலா 2 ஆட்பிணையில் செல்ல அனுமதித்தார்.

கொடிகாமப் பொலிஸ் பிரிவில் உள்ளவர்களே பிணையில் நிற்க வேண்டும் என்றும் தினமும் கொடிகாமப் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டுமென்றும் உத்தரவிட்டார்.

இவர்களுக்கான அடுத்த தவணை எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-29)

# பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் சம்பியன்

தென்மராட்சி பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடைபெற்ற பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி அணி சம்பியனாகியது. (ஸ்ரீ-3-29)

# செயலமர்வு

வடமராட்சி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் தரம் 6,7,8,9 ஆகியவற்றில் செயன்முறைத் தொழில்நுட்பம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வருகை தரும் ஆசிரியர்கள் பாடநூல்களை எடுத்து வருமாறு வடமராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

★★★

வடமராட்சி கல்வி வலயத்தில் தரம் 2 வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலையிலுள்ள ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை தரம் 2 ஆரம்பக் கல்வி கணித பாடமும் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பக்கல்வி தமிழ் பாடமும் நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்றும் ஆசிரியர்கள் பாடநூல்களையும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளையும் மற்றும் செயலட்டை தயாரிப்பதற்கு தரஉள்ளீட்டுக் காகிதாதிகளையும் தவறாமல் எடுத்து வருமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

# பொதுக்கூட்டம்

(அல்வாய்)

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் பாடசாலை அதிபர் திருமதி செங்கமலம் பாலேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-19)

★★★

பொலிகண்டி அம்பிகை சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 20 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு அம்பிகை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு சனசமூக நிலைய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-3-48)



தொண்டைமானாறு பகுதியில் இரவு வேளைகளில் ஊருக்குள் வரும் சருகுப் புலிகளினால் ஆடுகள் கடித்து கொல்லப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அவ்வாறு கொல்லப்பட்ட ஆட்டினைப் படத்தில் காணலாம்.

(படம் :- உடுப்பிட்டிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மனிதனின் திறமை

"வாழ்கையே வெறுத்துவிட்டது சேர்" என்று சொல்லிக் கொண்டு ஒரு இளைஞன் வந்தான்.

"ஏனப்பா இப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்டேன்.

"நான் இந்த உலகத்துக்கு தேவையே இல்லைசேர்" என்றான்.

"இந்த உலகத்திலே தேவையில்லாமல் எதுவுமே இல்லை" என்றேன்.

என்னை நிமிர்ந்து பார்த்தான்.

"இப்ப உன் உடம்பிலுள்ள காலை எடுத்துவிடுவோமா? அது உனக்குத் தேவையில்லை" என்றேன்.

"நடப்பதற்கு அது வேண்டுமா?" என்றான்.

"சரி கையை எடுத்துவிடுவோமா" என்றேன். அப்படியானால் சாப்பிடுவது எப்படி என்றான். சரி அப்படியானால்

இப்ப உன் உடம்பில் தேவையில்லாமல் அநாவசியமாக இருக்கும் ஒரு பகுதியை சொல் என்றேன். யோசனை செய்து பார்த்தான்.

"எல்லாம் அவசியமாகத்தான் இருக்கிறது" என்றான்.

"உனக்கெல்லாம் அவசியம். ஆனால் நீ இந்த உலகத்திற்கு அவசியமில்லை அப்படித்தானே" என்றேன். அவன் குழம்ப ஆரம்பித்துவிட்டான்.

பலர் இப்படித்தான் தன்னுடைய திறமை என்னவென்று தெரிந்து கொள்ளாமலே இருந்துவிடுகிறார்கள்.

அவர்கள் யார் என்பது அவர்களுக்கே அடையாளம் தெரியவில்லை. ஆடு, மாடுகளுக்குக் கூட அவற்றின் திறமை என்னவென் பது தெரிகிறது.

அவை எல்லாம் ஆகாயத்தில் பறவைகள் போன்று பறக்க வேண்டுமென்று ஆசைப்படுவதில்லை.

சரி ஒருத்தனுக்கு என்ன திறமை இருக்கிறதென்பதை எப்படிக் கண்டு பிடிப்பது?

இந்த உலகத்தில் இருக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு தனித்தன்மையுண்டு. ஒருத்தன் மாதிரி இன்னொருத்தன் இருப்பதில்லை.

ஆனாலும் உளவியல் நிபுணர்கள், மனிதர்களின் குணாதிசயங்களை வைத்து அவர்களை மூன்று வகையாகப் பிரிக்கின்றார்கள்.

அதாவது மூன்று வகை மனிதர்கள்.

சிலபேர் எப்படியென்றால் தாம் சம்பந்தப்பட்ட வேலையுடன் இருந்து விடுவதில்லை. எதிர்த்தரப்பில் இருப்பவர்கள் செய்யும் வேலை,

அடுத்த பிரிவிலிருக்கும் வேலை எல்லாவற்றிலும் கூடத் தலையிடுவார்கள். மனோதத்துவத்தில் இதற்கு(Dominance)என்று பெயர்.

இப்படிப்பட்ட குணாதிசயம் உள்ளவர்கள் எதற்குப் பொருத்தம் தெரியுமா?

ஒரு நிறுவனத்தில் தலைமை தாங்கி நடத்துவது, நிர்வாகப் பொறுப்பு வகிப்பது இதற்கெல்லாம் இவர்கள் ரொம்பப் பொருத்தமாக இருப்பார்கள்.

சரி, இதில் அடுத்தரகம், எப்படித்தெரியுமா? இவர்கள் இனிமையாகப் பேசுவார்கள், திறமையாகப் பேசுவார்கள், அடுத்தவர்களுடன் பேசுவதற்கும் ஆசைப்படுவார்கள். இப்படிப்பட்டவர்களெல்லாம் விற்பனைகுறையும் வேலை பார்ப்பதற்கு மிகவும் பொருத்தம்.

மூன்றாவது வகை மனிதர்கள் எப்படியென்றால், மற்றவர்களுடன் அதிகம் பேசமாட்டார்கள். இன்னும் சொல்லப்போனால் மற்றவர்களுடன் பேசுவதே இவர்களுக்குப் பிடிக்காது.

செய்யும் வேலையை நுணுக்கமாகச் செய்வார்கள். எந்தப்பிரச்சினையாக இருந்தாலும் சரி, அது தொடர்பான அனைத்துத் தகவல்களையும் சேகரிப்பார்கள்.

இப்படியானவர்களுக்கு ஆராய்ச்சித்துறை, கணக்கியல்துறை சம்பந்தமான பொறுப்புக்களைக் கொடுக்கலாம்.

ஒவ்வொரு மனிதனையும் கொஞ்சம் கூர்ந்து கவனித்துப்பா ருங்கள். அவனுக்குள் இந்த மூன்று விதமான திறமைகளும் உண்டு. எது அதிகம், எது குறைவு என்பதில்தான் வித்தியாசம் உண்டு.

நாம் ஒவ்வொருவரும் சுயமாக சிந்தித்துப் பார்க்கவேண்டும். நாம் எந்த வகையென்று கண்டுபிடிக்கவேண்டும். நாம் எந்த வகைக்குள் உள்ளடங்கக் கூடியவர் என்பதைப் புரிந்துகொண்டு அதற்கு தகுந்தற்போல் ஒரு வேலையை தேடிக் கொண்டால் வாழ்க்கை நல்ல விதமாக அமையும் .

நான் இந்த உலகத்தில் தேவையில்லை என்று சொல்ல வேண்டிய அவசியமிராது. கணக்கியல் சம்பந்தமான வேலைக்கு நேர்முகத்தேர்வு நடந்தது. ஒருத்தர் வந்தார். அவரிடம் 8 × 3 = என்னவென்று கேட்டார்கள். 23 என்றார். சரி போ என்று சொல்லிவிட்டார்கள். இவர் வெளியில் வந்ததும் யோசித்தார். அடடா... 8 × 3 என்னவென்று கேட்டார்கள். 24 என்று சொல்வதற்குப் பதிலாக 23 என்று சொல்லிவிட்டோம். நிச்சயமாக நமக்கு இந்த வேலை கிடையாது என்று முடிவு செய்து கொண்டு போய்விட்டார்.

10 நட்களில் அவருக்கு நியமனக்கடிதம் வந்தது. சரி, ஏதோ தவறு நடந்திருக்கிறது என்று நினைத்தார்.

எதையும் வெளியே சொல்லாமல் வேலையில் போய்சேர்ந்து கொண்டார்.

நீண்ட நாட்களின் பின் வேலை நிரந்தரமானதும் மெதுவாக மனேஜரிடம் உண்மையைச் சொன்னார். "சேர் நேர்முகத்தேர் வில்8 × 3 என்னவென்று கேட்டீர்கள். நான் 23 என்று தவறாக சொல்லிவிட்டேன்" என்றான்.

அதற்கு மனேஜர் சொன்னார்:"அன்றைக்கு நேர்முகத் தேர்வுக்கு வந்த எல்லோரிடமும் இதைக் கேட்டோம். 8 × 3 என்னவென்று கேட்டோம். நேர்முகத்தேர்வுக்கு வந்த எல்லோரிலும் கிட்டத்தட்ட சரியாகச் சொன்னது நீங்கள்தான். அதனால்தான் உங்களுக்கு இந்த வேலை கிடைத்தது" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# க.பொ.த (சா/த) பரீட்சை முடிவுகள் இம்மாத இறுதிக்குள் வெளியிடப்படும்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைப் பெறுபே றுகள் இம்மாத இறுதிக்குள் வெளியிடப்படுமென கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சாதாரணதர பரீட்சை வினாத்தாள் திருத்தும் பணிகளுக்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை காரணமாகவே பெறுபேறுகளை வெளியிடுவதற்கு காலதாமதம் ஏற்பட்டதாகவும் மிக விரைவில் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை நடைபெற்ற பரீட்சைகளில் நாட்டில் உள்ள 3 ஆயிரத்து 804 பரீட்சை நிலையங்களில் 5 இலட்சத்து 4 ஆயிரத்து 416 மாணவர்கள் பங்குபற்றினர். இவர்களில் ஒரு இலட்சத்து 9 ஆயிரத்து 813 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகும்.

இதேவேளை நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு வடபகுதியில் மீள்குடியேறிய 2 ஆயிரத்து 598 மாணவர்களும் முன்னாள் விடுதலைப்புலி போர்ராளிகள் 173 பேரும் தோற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசில் நாளும்

நீர்வேலி ஸ்ரீ கணேசா அறநெறிப்பாடசாலையின் 10 ஆவது அகவை நிறைவு விழாவும் பரிசளிப்புவிழாவும் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை முன்றலில் சிவஸ்ரீ கு.தியாகராஜ குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபரும் நீர்வேலி கலைபண்பாட்டுப் பேரவையின் தலைவருமான இ.குணநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

(ஸ்ரீ-9)

# இலங்கையுடன் வலுவான நிதிப்பரிமாற்ற ஒப்பந்தத்தில் கைச்சாத்திட பாக்.இணக்கம்

இலங்கையுடன் வலுவான நிதிப்பரிமாற்ற ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு பாகிஸ்தான் இணக்கம் தெரிவித்துள்ளது.

ஆசிய பிராந்தியத்தின் நிதி ஸ்திரத்தன்மைக்கு இது பங்காற்றுமென்று பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி தெரிவித்துள்ளார்.

சீனாவுடனான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்ட பின்னர் அவர் துருக்கி ஆகிய நாடுகளுடன் நிதி ஸ்திரத்தன்மை தொடர்பான இணக்கத்தை எட்டுவது முக்கியம் வாய்ந்ததாகும்.

ஆசிய பிராந்தியத்தின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு வர்த்தக நிதிப் புரிந்துணர்வு முக்கியமானது. இலங்கை அபிவிருத்தி அடைந்து வருவது ஆசிய பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ஸ்ரீ-9)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 180 | 180 | 160 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 240 | 200 |
| தக்காளி | 100 | 140 | 200 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 50 |
| கோவா | 100 | 100 | 120 | 90 |
| கரட் | 120 | 180 | 200 | 120 |
| பூசணி | 60 | 60 | 80 | 70 |
| புடோல் | 70 | 110 | 100 | 100 |
| வாழைக்காய் | 50 | 50 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 90 | 110 | 80 |
| பெரிய வெங்காயம் | 65 | 60 | 90 | 80 |
| பாகற்காய் | 150 | 160 | 180 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 150 | 200 | 140 |
| கருணைக் கிழங்கு | - | 100 | 100 | - |
| பயற்றங்காய் | 170 | 80 | 200 | 200 |
| லீக்ஸ் | - | 150 | 130 | 140 |
| பீற்றூட் | 70 | 60 | 100 | 90 |
| கறிமிளகாய் | 180 | 180 | 200 | 160 |
| முருங்கைக்காய் | 500 | 500 | 600 | 500 |
| போஞ்சி | 140 | 130 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 180 | 120 |
| கீரை - 1 பிடி | 5-15 | 20 | 20 | 15-20 |
| தேசிக்காய் | 70 | 50 | 80 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 35-60 | 50 | 60 | 30-60 |

# இராசி பலன்

*12.03.2011*

*(மாசி 28, சனிக்கிழமை)*

*சூரிய உதயம் காலை 6.20 மணிக்கு*

*சப்தமி பிற்பகல் 12.42 மணிவரை*

*ரோகிணி பிற்பகல் 4.18 மணிவரை*

*இராகுகாலம் 9.22-10.52 மணிவரை*

*சுபநேரம் 3.22-4.52 மணிவரை*

*அமிர்த சித்தம்*

**மேடம்** யோகமான நாள், யோசிக்காமல் செய்த காரியங்களில்கூட வெற்றி கிடைக்கலாம், மங்கள நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வாக்குமேன்மையுண்டு.

**இடபம்** பிற இனத்தவரால் பெருமை [illegible] வேண்டிய நாள், தொழில் நல[illegible] கருதி பயணம் ஒன்றை மேற்கொ[illegible]ளும் வாய்ப்புண்டு, திட்டமிட்ட காரியத்தில் மாற்றம் செய்வீர்கள்.

**மிதுனம்** பக்குவமாகப்பேசி காரியம் சாதிப்பீர்கள், புதிய நட்பால் பொருள் விரயம் ஏற்படலாம், வியாபாரத்தில் சில மாற்றங்கள் ஏற்படலாம். சயனசுகக் குறைவுண்டு.

**கடகம்** பணவரவு திருப்திதரும், தொழில் வளர்ச்சியுண்டு. உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் நாள், பொதுவாழ்வில் புகழ் கூடும், போசன சுகமுண்டு.

**சிங்கம்** சிறப்பான நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கி நகரும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** தொழிலில் இருந்த எதிர்ப்புக்கள் குறையும், திடீர் பயணங்கள் ஏற்படலாம், புதிய திட்டங்களை முன்வைப்பீர்கள், செலவுகள் குறைவடையும்.

**துலாம்** துயரங்கள் தீர அம்பிகையை வழிபடவேண்டிய நாள், எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், சேமிப்புக்களில் ஒரு பகுதி கரையலாம்.

**விருச்சிகம்** அபூர்வ சந்திப்புண்டு, முயற்சிக்கேற்ப பலன் கிடைக்கும், களஸ்திர நன்மையுண்டு, தொழில் நலன்கருதி புதிய கூட்டாளிகளை சந்திப்பீர்கள்.

**தனுசு** உறவினர் அனுசரணையாக நடந்து கொள்வர், வருங்காலத்தைப் பற்றிய சிந்தனை மேலோங்கும், கடன் பிரச்சினைகளை மாற்றியமைப்பீர்கள்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், சொத்துக்களால் சிறு ஆதாயம் கிடைக்கலாம், பிள்ளைகளால் பெருமையடைவீர்கள், தொழில்வளர்ச்சியுண்டு.

**கும்பம்** தாய்வழி ஆதரவு கிடைக்கும், சுப செலவுகள் அதிகரிக்கும், மனதிற்கினிய செய்திகள் வந்து சேரும், உஷ்ணநிலையுண்டு, கற்பனைகள் அதிகரிக்கும்.


**மீனம்** நண்பர்கள் ஆதரவு தருவார்கள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவுக்கு வரும், பிரயாண நன்மையுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமனித வருமானம் 4 ஆயிரம் டொலர்கள் வரை உயர்த்தப்படும்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் தனி மனித வருமானத்தை 4 ஆயிரம் டொலர்கள் வரையில் உயர்த்துவதே தமது இலக்காகும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உள்ளூராட்சிச் சபை வேட்பாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சுதந்திரம் பெற்றபோது தனிமனித வருமானம் 800 டொலர்களாகக் காணப்பட்டது.

அதை ஐந்து வருடத்தினுள் 2 ஆயிரத்து 50 டொலர்களாகக் கொண்டுவந்துள்ளதுடன் அது தற்போது 2 ஆயிரத்து 400 டொலர்கள் என்ற நிலையில் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில் ஐந்து வருடங்களில் தனிமனித வருமானத்தை 4 ஆயிரம் டொலர்களாக உயர்த்துவதே தமது எதிர்பார்ப்பாகும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# மாவை ஆதீனகர்த்தாவின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்

## கலாநிதி நா.வி.மு.நவரெத்தினம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஈழத்தில் புகழ்பெற்ற மாவைக்கந்தன் ஆலயத்திலிருந்து கடந்த 8 தசாப்தங்களாக வேத, சிவாகம கிரியைகளை அதி உயர்வாக வளர்த்து உலகெங்கும் போற்றி ஏற்றப் பெற்ற மாவைக்குருமணி இறைபதம் அடைந்தமை சைவ உலகினர்க்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் என யாழ். பல்கலைக்கழக இசைத் துறை தலைவர் கலாநிதி நா.வி.மு. நவரெத்தினம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாவைக்கந்தன் ஆலயத்தின் சிறப்புக்கும் உயர்வுக்கும் அவர் மிகமுக்கிய காரணமாக இருந்தார். மாவை உற்சவங்களை சைவ மக்கள் உணர்ந்து போற்றும் அளவிற்கு அவர் புகழ் இன்றும் நிலைத்து நிற்பது மட்டுமன்றி என்றும் நிலைத்திருக்கும். மகாராஜ ஸ்ரீ என்ற அதியுயர் நிலையில் அவர் புகழ்மிக்க வேதாந்த, சித்தாந்த புராண, இதிகாசங்களின் வித்தகராகவும் வடமொழி, தென்மொழி, மேலைமொழிகளுடன் ஏனைய மொழிகளிலும் கருமங்களை அதிசிறப்பாக ஆற்றக்கூடிய அதியுயர் தகைமைமிக்க மேன்மைக்குரியவராகவும் விளங்கினார். தெல்லிநகர் துர்க்கை மற்றும் கீரிமலை நகுலேசர் ஆலய வளர்ச்சிகளிலும் அவர் ஆற்றிய பெரும்பங்கு ஈடிணையற்றது.

நமது நாடு கடந்த சில மாதங்களில் மிகப் பெரிய இருவேத சிவாகம விற்பனர்களை உலகத்தோர் தொழுத தெய்வீக மாமலைகளை இழந்து நிற்பது மிகமிக வேதனையைத் தருகின்றது. இராமநாதன் நுண்கலை வளாகத்தின் சார்பில் இம்மாமணிகட்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் என்றும் அழியாத பேரின்பத்தை அவர்கள் அடைய இறையினை சிந்திப்போம். (ஸ்ரீ)

# யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினரால் முன்பள்ளிக்கு தளபாடங்கள் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை உறுப்பினர் கே.என். விந்தன் கனகரத்தினம் 2010 ஆம் ஆண்டுக்குரிய தனது நிதியொதுக்கீட்டிலிருந்து யாழ். திருக்குடும்ப கன்னியர் மட முன்பள்ளிக்கு 40 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்கள், மின்விசிறி என்பவற்றை வழங்கியுள்ளார்.

யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவின் ஒப்புதலின் பிரகாரம் நேற்று யாழ். மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் வைத்து மேற்குறித்த பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ். மாநகரசபை உறுப்பினர் கே.என்.விந்தன் ஆகியோர் கலந்துகொண்டு தள பாடங்களை முன்பள்ளி பொறுப்பாளர் அருட் சகோதரி ரனிஸ் லோசிடம் கையளித்தனர்.

இவற்றில் 16 கதிரைகளும் 15 மேசைகளும் உள்ளடங்குகின்றன.

இந்நிகழ்வில் மாநகர சபை உறுப்பினர் கே.என்.விந்தன் கருத்து தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் சில முன்பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவற்றிக்கான உதவி கள் பூர்த்தியாக்கப்பட வேண்டும்

அத்தோடு திருக்குடும்ப கன்னியர் மட முன்பள்ளி சமூகத்தினர் தமது தேவைகளை எமக்குத் தெரிவித்ததன் பிரகாரமே இவ்வுதவி கள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2-6)

# மான் வேட்டையில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது

(கொழும்பு)

மூதூர் பிரதேசத்தில் மான் வேட்டையில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக சிங்கள ஊடக மொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மான் ஒன்றை துப்பாக்கியால் சுட்டு கொண்டு செல்லும் போது குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் குறித்த குற்றச்சாட்டுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களும் ஐந்து வெளிநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை எதிர்வரும் 17 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன் றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த காட்டுப் பகுதியில் ஆயுததாரிகள் சஞ்சரிப்பதாக கிடைக்கப்பெற்ற தகவல்களை அடுத்து நடத்தப்பட்ட சோதனையின் போது குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மாடுகள் மற்றும் மான்களை வேட்டையாடி அந்த இறைச்சியை விற்பனை செய்து வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# கடற்கொள்ளையர்களிடம் சிக்கிய மீனவர்கள் விடுதலை

(கொழும்பு)

கடந்த நவம்பர் மாதம் 12 மீனவர்கள் சோமாலிய கடற்கொள்ளையர்களினால் பிடிக்கப்பட்டனர்.

அவர்களில் இரண்டு மீனவர்களை கடத்திச் சென்ற சோமாலிய கொள்ளையர்கள் எஞ்சிய 10 பேரையும் விடுதலை செய்தனர். அவர்கள் தற்போது இந்தியாவின் மினிகோ தீவில் தங்கவைக்கப் பட்டுள்ளனர்.

இந்நிலையில் அவர்களை விடு விக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக டில்லியில் உள்ள இந்திய உயர்ஸ்தானி கரக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

# ஆந்திராவில் மணம்முடித்து வாழும் இலங்கைப் பெண்கள் அவலத்தில்

(கொழும்பு)

இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தில் தங்கியிருப்பதற்கான விசாக்காலம் முடிவடைந்த நிலையில் அங்குவாழும் இலங்கைப் பெண்களை நாடு கடத்த இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

விசா காலாவதியான நிலையில் உள்ள இலங்கைப் பெண்களை நாடுகடத்த கடந்த ஆண்டு டிசம்பர் 10 ஆம் திகதி அரசால் தீர்மானம் முன்னெடுக்கப்பட்டது.

அதேவேளை இந்தியர்களை திருமணம் முடித்த சுமார் 20 பெண்கள் இத்தீர்மானத்தால் பாதிப்புறுகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

ஆந்திரா மாநிலத்தில் இந்தியர்களை திருமணம் முடித்து 10-15 வருடங்களாக அங்கு வாழும் பெண்கள் மீதே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2ஆம் திகதி நாடு திரும்பிய கே.பி. புனிதவதி என்ற பெண் இதனைத் தெரிவித்துள்ளார். இவர்களது கணவன்மாருக்கும் பிள்ளைகளுக்கும் அப்பிரதேசத்தில் தொடர்ந்து வாழ்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)



சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் பாடிய திருமுறைச் செல்வம்-மூவர் தமிழ் -தேவாரத் திருப்பதிகங்கள் அடங்கிய இறுவெட்டு அண்மையில் வெளியிடப்பட்டது. இதன் முதற் பிரதியை இராசையா ஸ்ரீதரனிடமிருந்து யாழ். ஸ்ருடியோ உரிமையாளர் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

# தமிழ்பேசும் 5 ஆயிரம் பொலிஸார் விரைவில் இணைத்துக்கொள்ளப்படுவர்

## அமைச்சர் டலஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழ் பேசும் 5 ஆயிரம் பொலிஸ் அதிகாரிகள் விரைவில் பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். இதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படும்.

அரசியல மைப்பு திருத்தச் சட்டங்கள் குறித்து பேசிக்கொண்டிருப்பதை விட இவ்வாறான செயற்பாட்டு விடயங்களே முக்கியமானவையாக உள் ளன என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான டலஸ் அழகப் பெரும தெரிவித்தார்.

வடக்கின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்வதி அம்மாளைப் பார்ப்பதற்காக யாழ்ப்பாணத்திற்கு வந்த 'பத்மா'

**10 மீட்டருக்கு ஒரு பொலிஸ், 100 மீட்டருக்கு ஒரு ராணுவமுகாம்...**



அடையாள அட்டை இல்லாமல் நகரவே முடியாது என்ற திகில் சூழலில் இருக்கிறது இலங்கை. ஆனாலும், புலித் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாள் இறப்பதற்கு ஆறு நாட்கள் முன், தன்னந்தனியாக சென்று அவரை சந்தித்துத் திரும்பியிருக்கிறார், ம.தி.மு.க-வின் தஞ்சை மாவட்டத் துணைச் செயலாளரான க.பத்மா. உலகளாவிய தமிழ்ச் சங்கம், கலாசார பண்பாட்டு இயக்கம், பெரிய கோயில் மீட்புக் குழு ஆகியவற்றிலும் முக்கியப் பொறுப்புகள் வகிக்கும் பத்மாவிடம் இலங்கைப் பயண அனுபவங்களைக் கேட்டோம்.

"தொப்புள்கொடி உறவான ஈழத் தமிழர் மேல் எனக்குப் பேரன்பு உண்டு. அந்த உணர்வால்தான் ம.தி.மு.க-வில் இணைந்தேன். இதற்கு முன்பு 84, 86 ஆம் ஆண்டுகளில் இலங்கை சென்றேன். இப்போது போர் முடிந்த சூழலில் எம்மக்கள் அங்கே எப்படியிருக்கிறார்கள். தற்போதைய நிலையென்ன, அவர்களின் உணர்வுகள் எப்படியிருக்கிறது என்பதை தெரிந்துகொள்ள விரும்பினேன். மேலும், பார்வதி அம்மாளை இந்தியாவுக்குள் நுழையவிடாமல் திருப்பி அனுப்பிய கொடுமையை என்னால் சகிக்க முடியவில்லை. அந்த அன்னையின் முகத்தை ஒரு முறையேனும் நேரில் பார்க்க வேண்டும் என்ற ஆர்வமும் ஆசையும் உந்தித் தள்ளவே ஜனவரி 27ஆம் திகதி இலங்கைக்குச் சென்றேன்.

**"எப்படி விசா வாங்கினீர்கள்?"**

"கொழும்பில் உள்ள என் உறவினர்களைப் பார்க்க விரும்புவதாகச் சொல்லித்தான் விசா பெற்றேன். வவுனியாவில் நான் சந்தித்த ஒரு உணவு விடுதியின் உரிமையாளருக்கு யாழ்ப்பாணத்தில்தான் வீடும் குடும்பமும் இருந்தது. அங்கே போவதாகச் சொல்லி எப்படியோ அனுமதி வாங்கி, யாழ்ப்பாணம் சென்று இரண்டு நாட்கள் தங்கினேன்."

**"எப்படி இருக்கிறது யாழ்ப்பாணம்?"**

"ஒரு காலத்தில் பரந்து விரிந்த வீடுகளும் அழகிய கோயில்களும் வயல்வெளிகளுமாகக் காட்சியளித்த இடங்கள், இப்போது ராணுவம் குடி இருக்கும் இடங்களாகவே இருக்கின்றன. மண் குவியல், கல்குவியல், பனை மரக் குவியல்... என்று எது இருந்தாலும், அதற்கு பின்னே இருக்கும் ராணுவத்தினரின் துப்பாக்கி நம்மைக் குறிபார்த்துக் கொண்டே இருக்கிறது! முன்பு குடும்பங்கள் இருந்த இடத்தில் எல்லாம், இப்போது முள் செடியின் விதைகளைத் தூவித்தூவி, காடாக மாற்றுகிறார்கள் சிங்களவர்கள் அநாதைக் குழந்தைகளும், பிள்ளைகளை இழந்த முதியோர்களும் விரவிக் கிடக்கிறார்கள். அநாதைகள் போல் அவல வாழ்வுதான் வாழ்கிறார்கள் நம் சொந்தங்கள்."

**"பார்வதி அம்மாளை சந்தித்தீர்களா?"**

"எப்படி வல்வெட்டித் துறை சென்று அம்மாவைப் பார்ப்பது என்று யாழ்ப்பாணத்தில் கவலையுடன் இருந்த என்னை மருத்துவக் கல்லூரி மாணவர் ஒருவரின் தந்தைதான் கடந்த மாதம் 16ஆம் திகதி வல்வெட்டித் துறை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்! எனக்கு ரத்த அழுத்தம் அதிகமாகி... மயக்கம் வந்துவிட்டது" என்று நாடகமாடி, பார்வையாளர் நேரமான மதியம் 12 மணிக்கு அந்த மருத்துவமனைக்குள் நுழைந்தோம். காவலுக்கு இருந்த ராணுவத்தினர் நல்ல வேளையாக என்னைக் கேள்வி எதுவும் கேட்கவில்லை. சரசரவென உள்ளே நுழைந்து, தாதியிடம் 'அம்மா' என்று கேட்பதற்குள் 3ஆம் நம்பர் வார்டு" என்றார். அங்கே பொதுப் படுக்கை அறையில் இருந்த எட்டு படுக்கைகளில் ஒன்றில், அந்த வீரத் தாய் படுத்துக் கிடந்தார். ஓடோடிப்போய் அவரது கால்களைக் கட்டிபிடித்துக் கதறினேன்.

## கால்களைப் பிடித்து கதறி அழுதேன்


கால்கள் ஐஸ் போல ஜில்லிப்புடன் இருந்தன. தாதிப் பெண் ஓடோடி வந்து என்னை ஆறுதல்படுத்தி "நீங்கள் அவருக்கு உறவா?" என்றார். "ஆமாம், அவரின் மகள்" என்றேன். என் உணர்வுகளைப் புரிந்துகொண்ட அவர், அம்மாவின் காதில் "அம்மா! உங்கள் மகள் வந்திருக்கிறார்" என்று சொன்னார். அவ்வளவு நேரம் மூடியே இருந்த அம்மாவின் விழிகள் மெல்லத் திறந்தன. அந்த விழிகளின் கடையோரத்தில் நீர்க்கசிவு. கண்களைத் துடைத்துவிட்டு தலையை ஆதரவாகத் தடவிக்கொடுத்தேன்.

அப்படியே கண்களை மூடிக் கொண்டார் அம்மா. பிறகு உலகத் தமிழர்களின் நாயகனைப் பெற்றெடுத்த அந்த வயிற்றில் என் முகம் பொதித்து, நெடுநேரம் ஆசை தீர தாய்மையின் பெருமையை அனுபவித்தேன். என் வாழ்க்கையின் பயனைப் பெற்றுவிட்ட திருப்தியோடு கொழும்பு திரும்பி, இந்தியாவுக்கு வந்தேன். நான் இந்தியா வந்த ஆறாம் நாள் அம்மாவின் உயிர் பிரிந்துவிட்டது."

**"அங்கு உள்ள தமிழர்களின் உணர்வுகள் எப்படி இருக்கின்றன?"**

"நம் மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து தங்கள் ஈழக் கனவைத் தகர்த்துவிட்டதாகத்தான் அனைவருமே சொல்கிறார்கள். அவர்களை அழித்தொழிக்க இலங்கை அரசுக்கு இந்தியா செய்த உதவிகளைப் பட்டியலிடும் அவர்கள், "இந்தியா தலையிடாமல் இருந்திருந்தாலே, ஈழம் பெற்றிருப்போம்" என்று உறுதியாகச் சொல்கிறார்கள். இன அழித்தொழிப்பு நடந்த வேளையில் அதை உண்மையாகத் தடுக்க முனையாமல், "கடிதம்... உண்ணா விரதம்" என்று நாடகங் கள் நடத்திய கருணாநிதி மீது அவர்களுக்குக் கடுமையான கோபம்!

வல்வெட்டித்துறையில் இருக்கும் பிரபாகரனின் வீட்டுக்கும் போனேன். அங்கு முள் வேலிக்குள் கையைவிட்டு ஒரு பிடி மண் எடுத்துவந்தேன். அதை யாழ்ப்பாணம் முதல் கொழும்பு வரை உள்ள பகுதிகளில் வசிக்கும் தமிழர்கள் அனைவரும் திருநீறாகக் கருதி பூசிக்கொண்டு, தங்கள் பிள்ளைகளுக்கும் பூசிவிட்டனர். பிரபாகரன் உயிருடன் இருப்பதாகவே உறுதியாக நம்புகிறார்கள். தங்கள் காவல் தெய்வம் வரும் என்று காத்திருக்கிறார்கள், அப்போது மீண்டும் இலங்கை செல்ல நானும் காத்திருக்கிறேன்!"



பார்வதி அம்மாளுடன் பத்மா

விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழையில் பீடைகளும் அவற்றின் முகாமைத்துவமும்

13-XIII

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாழையில் விவசாயப் பெருமக்களுக்கு பிரச்சினையாயுள்ள பீடைகளைப் பற்றி விரிவாக ஆராயும் இக்கட்டுரைத் தொடரில் இன்னும் இனங்காண முடியாது இருக்கின்ற நோய்களைப் பற்றி எமக்குத் தெரிந்த தகவல்களை பதிவு செய்ய விரும்புகிறேன்.


### வாழையில் பக்றீரியா நோய்கள்

இதுவரை காலமும் வாழையைத் தாக்குகின்ற பூச்சி மற்றும் சிற்றுண்ணி பீடைகள், விலாங்குப்புழுக்கள் இவற்றுடன் நோயாக்கிகள் என்பனவற்றையும் முடிந்த வரையில் விரிவாகப் பார்த்தோம். இவையனைத்திற்கும் மேலாக இன்னும் பல நோய்களை வாழையில் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. குறிப்பாக பக்றீரியா எனும் நுண்ணங்கியினால் ஏற்படுத்தப்படும் நோய்கள் பாரதூரமானவை. இதனை பக்றீரியா வாடல் நோய் என அழைப்பர்.

பொதுவாகவே சுயமாக நோய்த்தொற்றுதலை ஏற்படுத்த முடியாத பக்றீறியாக்கள் தாவரத்தினுள் உட்புகுவதற்கு தாவர இலையில் காணப்படும் இலைவாய்களையும் தாவரத்தின் எந்தப் பகுதியிலும் ஏற்படுத்தப்படும் கீறல்கள், வெட்டுப்பட்ட பகுதிகள், பூச்சி மற்றும் விலாங்குப் புழுக்களினால் ஏற்படுத்தப்படும் சேதங்கள் என்பவற்றினூடாக உட்புகுந்துவிடும். தாவரத்திலேற்படுத்தப்படும் சேதங்கள் இவற்றுள் முக்கியமான காரணமாக அமைந்துவிடுகின்றது. இவ்வாறான சேதங்கள் மரங்கள் ஒன்றுடன்ஒன்று உராயும் போதும் ஏற்பட வாய்ப்புக்களுண்டு. அடர்த்தியாக வாழை வளர்ந்திருக்கும் போது ஓங்கியடிக்கும் காற்றினால் அல்லது மினி சூறாவளியினால் இவ்வாறு உராய்தல் ஏற்படவோ, வாழை முறிவடையவோ வாய்ப்புண்டல்லவா. இவ்வாறு ஏற்படும் போது நோயேற்படுத்தும் பக்றீறியாக்கள் மேலே குறிப்பிட்ட சேதங்கள் அல்லது காயங்களுக்கூடாக உட்புகுந்து விரைந்து பெருகி மேலும் சேதத்தை ஏற்படுத்திவிடுகின்றது.

இதனையே எம்மூதாதையர், வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுவது போல என கூறிவைத்திருக்கின்றார்கள் அல்லவா.

வாழைமரத்தை கூர்ந்து அவதானித்தால் இதனது போலித்தண்டு (Pseudostem) வழமையான மரங்களினது தண்டினை விட முற்றிலும் மாறுபாடானது. மிகவும் மெதுமையான இழையங்களைக் கொண்டிருப்பதனால் இதனுள் புறக்காரணிகளால் சேதமேற்படுத்தப்படுவது இலகுவானது. இதனால் சுழன்றடிக்கும் காற்றுக்கு தாக்குப் பிடிக்காமல் வாழை மரங்கள் இலகுவில் முறிவடைந்து விடும்.



இவை தவிர நீள்மூஞ்சி வண்டுகள், விலாங்குப் புழுக்கள் ஆகியவற்றின் சேதமும் இவ்வாறான பக்றீறியாக்கள் இலகுவில் உட்செல்ல வாய்ப்பை ஏற்படுத்திவிடுகின்றன. "இடங்கிடைத்தால் மடங்கட்டிவிடும்" எங்களூர் மேதாவிகள் போல நோயாக்கும் பக்றீறியாக்களுக்கும் வாழையினுள் எவ்வாறாவது உட்செல்ல வழிகிடைத்துவிட்டால் அந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி விரைந்து பெருகி வாழை மரத்தை அதனடியுடன் அதாவது கிழங்கு மற்றும் சுற்றியிருக்கும் வாழை மரங்கள் அனைத்தையுமே பாதிப்படையச் செய்துவிடும். விளைவு பக்றீறிய வாடலினால் வாழைத் தோட்டமே பாதிப்புற்று விடும்.

பக்றீறியா வாடல் நோயை இலகுவாக ஏனைய பயிர்களில் இனங்காண முடிந்தாலும் வாழையில் இதனது தாக்கத்தை ஆரம்பத்தில் இலகுவாக இனங்காண முடிவதில்லை. இதனால் வாழைச் செய்கையாளர்கள் இந்நோயை இனங்காணமுடியாதிருப்பதை அவதானிக்க முடிகின்றதுடன் இந்நோயை கட்டுப்படுத்த முடியாமலும் அவதிப்படுகின்றனர்.

குறிப்பாக வாழைத்தோட்டத்தில் செய்யப்படும் பயிர்ச்செய்கை செயற்பாடுகளினால் வாழைமரத்தில் ஏற்படுத்தப்படும் காயங்கள் இவ்வாறான பக்றீறியாக்கள் உள்பரவ ஏதுவாக இருக்கிறது. குறிப்பாக வாழை குலையை வெட்டியபின்பு வெட்டி விழுத்தப்படும் போலித் தண்டின் வெட்டுப்பட்ட பகுதி, நடுகைக்காக வாழைக்குட்டிகளை அகற்றும் போது கிழங்குப் பகுதியில் ஏற்படுத்தப்படும் காயம் என்பன தவிர்க்க முடியாத ஆனால் தேவை கருதி ஏற்படுத்தப்படுவனவாகும். இது விடயத்தில் பக்றீறியா வாடல் அல்லது இலை வெளிறல் நோய் இருப்பதற்கான சாத்தியக்கூறு இருப்பின் புதிதாக வாழை நடுகை செய்ய விரும்பின் நோய் ஏதுமற்ற இழைய வளர்ப்பு வாழையை தெரிவு செய்வது சாலப் பொருந்தும்.

அல்லாது விடில் நோயேதுமற்ற வாழைத் தோட்டத்திலிருந்து வாழைக்குட்டிகளைப் பெறுவதனை உறுதிசெய்து கொள்ளவேண்டும். ஏனைய நோய்களைப் போலல்லாது பக்றீறியா நோய்களினால் ஏற்படுத்தப்படும் பாதிப்பு எதிர்பார்ப்பதை விட அதிகம் என்பதனை நாம் மறந்துவிடலாகாது.

### பக்றீறியா வாடல் நோயும் பியூசேரியம் பூஞ்சண நோயும்

வெளிப்புறத்தில் அவதானித்தால் பியூசேரியம் பூஞ்சணத்தால் ஏற்படும் வாடல் நோயும் பக்றீறியாவினால் ஏற்படும் வாடல் நோயும் ஒரே மாதிரி இருக்கும். இரண்டையும் இலகுவில் வேறுபிரித்தறிவதும் கடினம். ஆதலால் இவ்விரு நோய் பற்றிய தெளிவான அறிவு வாழைச் செய்கையாளர்களுக்கு இருக்க வேண்டியது அவசியமாகின்றது.

பக்றீறியா வாடல் நோயின் ஆரம்ப அறிகுறிகளாக வாழைத்தண்டுக்கு அண்மையான உள்பக்க இலைப்பகுதியில் மஞ்சள் நிறம் தோன்றும். தொடர்ந்து இந்நிறம் இலைப்பரப்பில் பரவ ஆரம்பித்து ஒரு கிழமை மட்டில் இலை முழுக்க மஞ்சளாகி வாடல் அறிகுறியை காண்பிக்கும். நன்றாக அவதானித்தால் நடுவிலுள்ள குருத்திலை மட்டும் எந்த விதமான பாதிப்புக்குமுள்ளாகாமல் ஏனைய இலைகள் வாடியிருக்கும். நாள் செல்லச் செல்ல குருத்திலை கூட வாடத்தொடங்கும். இங்கே மேலே குறிப்பிடப்பட்ட நோயறிகுறிகள் பக்றீறியா வாடல் நோய்க்குரிய சிறப்பம்சமாகும்.

இவ்வாடல்நோய் அதிதீவிரத் தன்மையடையும்போது மேலுள்ள இலைகள் அனைத்தும் வாடலுக்குட்பட்டு காய்ந்து தொங்கிக் கொண்டிருக்கும். வாழையின் போலித் தண்டை குறுக்காக வெட்டினால் நடுவே கருமையான பகுதிகளை அவ தானிக்கலாம். இவை கலன் கட்டுக்கள் பக்றீறி யா கலங்களால் அடைபட்டு இறந்த அடையாளத்தை காட்டு வனவாக இருக்கும்.

### பக்றீறியாவின் தனிப்பட்ட இனம் இது

வாழையில் பக்றீறியா வாடல் நோயை ஏற்படுத்துவது சூடோமோனசு சொலனேசியாறம் எனப்படும் ஒரு வகை பக்றீறியா ஆகும். இப்பக்றீறியாவாடல் நோய் வந்த பின்பு கட்டுப்படுத்துவது மிகவும் கடினம். வருமுன் காக்கும் செயற்பாடுகளில் எங்களது கவனத்தைச் செலுத்துவதே என்றும் சிறந்தது.

நோயற்ற வாழைக்குட்டிகளை நடுகைக்காக தெரிவு செய்வதும், சுத்தமான பயிர்ச்செய்கையும், அவசிய மேற்படின் பயிர்ச்சுழற்சியை மேற்கொள்வதுமே சிறந்த முகாமைத்துவ முறைகளாக இருக்கும். எக்காரணங்கொண்டும் பக்றீறியா வாடல் நோயை ஏனைய வாழைத் தோட்டங்களுக்கு பரவவிடாது பார்த்துக் கொள்ளுதல் மிகவும் அவசியம். இந்நோயை கட்டுப்படுத்த எதுவிதமான இரசாயனப் பொருளும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்பதனையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். (தொடரும்)

# உள்ளூராட்சித் தேர்தலுடன் தொடர்புடைய 543 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன

## தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் அதிகாரி தெரிவிப்பு

உள்ளூராட்சி தேர்தலுடன் தொடர்புடைய சட்டவிரோத பிரசார நடவடிக்கைகள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் என 543 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் பிரதான நிறைவேற்று அதிகாரி உதித்த குணசேகர தெரிவித்துள்ளார்.

கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளில் மூன்று கொலை சம்பவங்கள், 66 தாக்குதல் சம்பவங்கள், கட்சி அலுவலகங்கள் மீதான தாக்குதல்கள் குறித்த 52 சம்பவங்கள், அச்சுறுத்தல் பற்றிய 22 முறைப்பாடுகள், துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டமைதொடர்பான 6 முறைப்பாடுகள், ஆட்கடத்தல் குறித்த 3 முறைப்பாடுகள் என அடங்குவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் 303 சட்டவிரோத தேர்தல் பிரசாரங்கள் தொடர்பான முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.பிரசார நடவடிக்கைகளுக்கு தடையேற்படுத்தியமை பற்றி 8 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாகவும் குணசேகர குறிப்பிட்டுள்ளார்.

ஜே.வி.பிக்கு எதிராக 51 வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக 41 வன்முறைச் சம்பவங்களும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு எதிராக 7 வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இந்த வன்முறைச் சம்பவங்கள் குறித்து தேர்தல் ஆணையாளருக்கு தெளிவுபடுத்தப்படுத்த உள்ளதாகவும் உதித்த குணசேகர கூறியுள்ளார். (ஶ்ரீ-2)




குருநகர் சின்னக்கடை மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் யாழ்.மாநகரசபை பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் நடத்தப்பட்ட திடீர்ப் பரிசோதனையின் போது காலாவதியான சோடா, ஒடியல்மா, மிக்சர், அப்பளம், சோயாசோஸ் என்பன மீட்கப்பட்டு உரிமையாளரின் சம்மதத்துடன் அழிக்கப்பட்டது. மீட்கப்பட்ட பொருட்களுடன் மாநகர சபை உறுப்பினர் அ.கிளபோடாசியஸ், சுகாதார பாதுகாவலர்கள், சந்தைமேற்பார்வையாளர்கள் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்:- குருநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளிக்காட்டு இதிகாசம்

62





கவிப்பேரரசு வைரமுத்து

மத்தியானம் பன்னண்டு மணியிருக்கும். கொழுத்துது வெயிலு. உச்சந்தலையில வெண்ணய வச்சா உருகி உள்ளங்கால்ல பிசுபிசுக்கும். சம்மா படைதெரட்டி வந்தாங்கையா பாதிக்கப்படப்போற பன்னண்டு ஊரு ஆளுகளும்.

"ஏய்! நிறுத்துங்கடா! பன்னண்டு ஊரத் தண்ணிக்குள்ள பொதச்சிட்டு அணை யாடா கட்றீக அண? எல்லாத்தையும் நிறுத்துங்கடா. அண மேல வேல செய்ற ஆளுகளா! எறங்கல... கல்லக் கொண்டெறிஞ்சு மண்டைய ஒடைச்சுப்புடுவம்."

ஆவேசம் வந்த ஆளுக கூட்டங்கூட்டமாப் பிரிஞ்சு அங்கங்க ஓடிப்போயி வேலைய மொடக்குறாக.

டீசல் இஞ்சின் டிரைவர ஆணியில தொங்குற சட்டையத் தூக்கி எறியிற மாதிரி அப்படியே தூக்கி எறிஞ்சுட்டு, இஞ்சின் சாவியக் கால்வாயில எறியுது ஒரு கூட்டம்.

கல்லொடைக்கிற ஆளுக வச்சிருந்த சம்மட்டிகளப் பிடுங்கித் 'தார் டின்'ன ஓங்கியடிச்சு ஒழுக விடுது ஒரு கூட்டம்.

கலவை மிசின் சக்கரத்துக்குள்ள கம்புக்குச்சிய விட்டு அத ஓட விடாமப் பண்ணுது ஒரு கூட்டம் .

லாறிக வார பாதையில சும்மா கெடந்த தார் டின்னையும் தகர டின்னையும் உருட்டி விடுது ஒருகூட்டம்.

ஒரு டீசல் டேங்க ஒடச்சு ஒழுக விட்டுத் தீக்குச்சியக் கொளுத்தி எறிஞ்சு 'கப கப கப' ன்னு எரிய விடுது ஒரு கூட்டம்.

தன் சூடு தாங்காமப் பூமி புழுங்குனது போக, பூமிச் சூடு தாங்காம மேகத்த இழுத்துக் கொடபுடிக்குது சூரியன்.

"அணைய நிறுத்துங்கடா. இல்லாட்டி எங்களுக்குப் பதில் சொல்லுங்கடா."

பெருஞ்சத்தம் கேட்டு மதகுமேல இருந்த ஆளுகள்லாம் மளமளன்னு குதிக்கிறாக.

என்னமோ ஒரு அசம்பாவிதம் ஆகிப் போச்சுன்னு இஞ்சினியரும் அதிகாரிகளும் ஜீப்புலயும் கார்லயுமா 'சர்சர்ரு'ன்னு தளத்திற்கு ஓடிவாறாக.

"நிறுத்துங்கய்யா! நிறுத்துங்க! எதாயிருந்தாலும் பேசித் தீர்க்கலாம் நிறுத்துங்க."

"அப்படி வாங்க வழிக்கு. கலகம் பெறந்தால்தான் நியாயம் பொறக்கும்."

கொஞ்ச நேரத்துல போலீசும் அதிகாரிகளும் காதோடு காதாக் கசகசன்னு ஏதோ பேச, வெந்து போற வெயில்ல துண்டுகள விரிச்சுப் பதறாம உக் காந்தாக பன்னண்டு ஊரு ஆளுகளும். மதுரைக்குத் தகவல் போக, கால்ல வெந்நி ஊத்திக்கிட்டு வந்து சேந்தாரு கலெக்டரு வைகை அணைக்கு. தாசில் தாரு மாதிரி தகிடுதத்தம் புடிச்ச ஆளுஇல்ல கலெக்டரு. கண்ணுல கருண தெரிஞ்சுச்சு; வார்த்தையில அன்பு இருந்திச்சு.

"ஒங்கள ஊரவிட்டு வெளியேத்தறதுக்காக அரசாங்கம் திட்டம் போடல. அணை கட்டுறதால நீங்க வெளிறே வேண்டிய சூழ்நிலை உருவாகிப் போச்சு. தேன் கூட்டக் கலைக்காமத் தேனெடுக்க முடியுங்களா? அப்படித்தான்."

பட்டிக்காட்டுக்குப் புரியறபாசையில பேசுறதா நெனச்சுப் பேசிப்புட்டாரு கலெக்டரு.

எந்திருச்சாரு பேயத்தேவர். "அய்யா! தேன் கூட்டக் கலைச்சாத் தேனீக்குத் தேன் குடிக்க வேற பூவுக இருக்கு. இதவிட்டா பொழைக்க எங்களுக்குப் பூமியிருக்கா?"

துணுக்குன்னு தூக்கிவாரி போட்டுச்சு கலெக்டருக்கு. இவர்களுக்கு எழுத்தறிவுதான் இல்லையே தவிர எல்லா அறிவும் இருக்குன்னு தெரிஞ்சுபோச்சு அவருக்கு.

"உங்களுக்கு நெலம் வேணும் அவ்வளவுதான?" நரம்புல ஊசிபோட்டது மாதிரி கலெக்டரு நேரா விசயத்துக்கு வந்தாரு.

"நெலம்னா நெலம் மட்டும் இல்லய்யா! ஊரே வேணும்யா. பத்துப் பன்னண்டு தலமொறையாச் சண்ட சத்தம் போட்டுக்கிட்டாச்சும் ஒண்ணா மண்ணா இருந்த சாதிசனம் சட்டிபொட்டியத் தூக்கிக்கிட்டு தெசைக்கொரு ஆளாப்போயிச் செத்தழியறதா? ஆளுக்கு அஞ்சு சென்ட்டு வீடு, அஞ்சு ஏக்கர் பூமி, அந்தந்த ஊருக்கு இருக்கிற அதே கோயிலு, அதே பள்ளிக்கொடம் சர்க்காரு குடுக்கட்டும். எங்க மனசு போல புது ஊரு உண்டாக்கிட்டா, பழைய ஊர விட்டுப் போறதப் பத்தி யோசிக்கலாம்."

உச்சி வெய்யில்ல நின்னுக்கிட்டே கையில இருக்கிற துண்ட ஆட்டி ஆட்டிப் பேயத்தேவர் பேசுறதக்கேட்டு ஆடிப்போயிட்டாரு கலெக்டரு.

கண்ணமூடி, தன்கையில தன் மூஞ்சியத் தாங்கிப்புடிச்சு, சுட்டு வெரலால நெத்திய ரொம்ப நேரமாத் தட்டிக்கிட்டேயிருந்த கலெக்டரு, "எங்க ரெவின்யூடிப்பார்ட்மெண்டு ஒங்களுக்கெல்லாம் எடம் பாத்து வச்சிருக்கு. அங்க வீடும் நெலமும் குடுத்தா வெளியேறச்சம்மதமா"ன்னு கொஞ்சம் சத்தம் போட்டுக் கேட்டாரு.

"எங்க எடம் பாத்திருக்கீக?" என்றார் கரட்டுப் பட்டி கல்யாணித்தேவர்.

"வருசநாடு- பச்சக் கோமாஞ்சி மலை- தாண்டிக்குடி எதுவேணும் ஒங்களுக்கு?

"நல்லாருக்குய்யா கத... சோத்துக்கு வழிகேட்டாச் சுடுகாட்டுக்கு வழிசொல்றாரு கலெக்டரு. அங்க இருக்கிற ஆளுகளே ஊதக்காத்துல வகுறு வீங்கிச் செத்தது போக ஊர்மாறி, ஊர்மாறி உசுருக்கு அலையுதுக. நாங்களும் அங்க போயிட்டா விண்டு விரிஞ்சு போகும் விரிசம்பழம். பொழைக்க வழி சொல்லுங்கய்யான்னாப் பொதைக்க வழி சொல்றீங்களே!" - கொண்டமநாயக்கரு கொதிச்சுப்போனாரு.

கலெக்டர் மேல வெயில் படுதுன்னு நாற்காலிய நகத்தி நிழல்ல போட்டுச்சு தாசில்தார் சமூகம்.

"நீங்க கேக்கறமாதிரி ஊர் உண்டாக்க வசதியில்ல. சர்காருக்கும் கைவசம் எடமில்ல. அதனால நீங்க நஷ்டஈடு வாங்கிக்கறதுதான் நல்லது."

கலெக்டர் உறுதியான குரல்ல ஓங்கிச் சொன்னதக் கேட்டு, ஒருத்தர் மூஞ்சிய ஒருத்தர் பாத்துக்கிட்டாக கூட்டத்து ஆளுக.

"அய்யா... கலெக்டரய்யா. நஷ்ரஈடுன்னா எதவச்சுக் குடுப்பீக?"-எந்திரிக்காமக் கையமட்டும் தூக்கிக்கேட்டாரு சைக்கிள்தேவர்.

"அவங்கவங்களுக்கு உண்டான சொத்து மதிப்ப வச்சுத்தான். வீட்டுக்கு ஒரு மதிப்பு- கிணறு உள்ள தோட்டத்துக்கு ஒரு மதிப்பு; புஞ்சக் காட்டுக்கு ஒரு மதிப்பு."

"அய்யா! மதுரைக் கலெக்டரே! மகராசனே! அம்புட்டுத்தேன் எங்க மதிப்பா?"-கேள்வி கேட்ட பேயத்தேவர் குரல் நடுங்குச்சு.

"வேற எதுக்கு மதிப்புப் போடணுங்கிறீங்க?"

"அய்யா! நீங்க குடுக்கிற பச்சநோட்ட வாங்கி எந்த ஊருக்குப் போனாலும் வீடு வாச வாங்கலாம்... நெலம் நீச்சு வாங்கலாம். கோயில் கட்டலாம்; கொளமும் வெட்டலாம். ஆனா எங்க அப்பன் ஆத்தா செருப்பில்லாத காலோட அலஞ்சு திரிஞ்ச தடம் இருக்கே அந்த மண்ணுல, அதுக்கு என்னய்யா நஷ்டஈடு குடுப்பீக? எங்க பாட்டன் முப்பாட்டன எத்தனையோ தலைமொறையா பொதைச்சுவச்ச இடுகாடு இருக்கே! அதுக்க என்னய்யா நஷ்டஈடு? நாங்க உக்காந்த பூமிக்கு- நின்ன பூமிக்கு -வெளையாண்டபூமிக்கு-வெளிக்கிருந்த பூமிக்கு என்னய்யா நஷ்டஈடு குடுப்பீக? எங்க ஊரு வெள்ளாமைய மட்டுமே நம்பி ஊரு தேசம் மாறிப் போகாம எங்க கள்ளிக்காட்டுக்குள்ளையே முட்டபோட்டுக் குஞ்சு பொரிக்கிற காக்கா குருவிக்கு என்னய்யா நஷ்டஈடு குடுப்பீக? பத்திரம் வாங்கி மதிப்புப் பார்த்துப் பணங்காசு குடுப்பீக. ஆனா பரம்பரையா அந்த மண்ணுல நாங்க சிந்துன கண்ணீருக்கும் வேர்வைக்கும் ரத்தத்துக்கும் என்ன மதிப்புன்னு ஒங்க பேரேட்ல எங்கயாச்சும் போட்ருக்கா?"

அதுக்கு மேல கேள்வி கேட்கத் தெம்பில்லாம கத்திக்கதறிக் கண்ணீரத் தொடச்சுக்கிட்டே உக்காந்திட்டாரு பேயத்தேவர். நாலுவரிசை தள்ளி உக்காந்திருந்த மெட்டூர்ப் பெரியாம்பள மளார்ன்னு தாண்டித் தவ்வி ஓடியாந்து- "ஏ பேயத்தேவா! அழுகாதப்பா! இதென்ன சின்னப் பிள்ளமாதிரி கண்ணக் கசக்கிக்கிட்டு...பூமி கைவிட்டாலும் சாமி கைவிட்டிருமா?" ன்னு தன் நெஞ்சுல போட்டுத் தாலாட்டித் தேத்துனாரு பேயத்தேவரை.

கூட்டமே தேம்பிநிக்குது. கலங்காத கல்லுமனசும் கரைஞ்சு உருகுது. அணைக்கட்டு வேலையாளுகளும் சேந்து அழுகிறாக. தாசில்தாரு கூட்டம் மட்டும் உத்தியோக வெறைப்புல வெடச்சு நிக்குது. கலெக்டர் கூட லேசாக் கண்ணு கலங்குன மாதிரி தெரிஞ்சுச்சு.

(வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசநோய் சமூக அணுகுமுறை

03

## நுரையீரல் அல்லாத பகுதிகளில் ஏற்படும் காசநோய்

**சுவாசப்பை அல்லாத பகுதியில் ஏற்படும் காசம்**

1.சுவாசப்பையின் வெளியே சுவாசப்பைச்சுற்றுச்சுவரில் ஏற்படும் பாதிப்பு சுவாசச்சுற்றுப் பாயின் அளவு அசாதாரணமாக அதிகரித்தலும்.

2. இதயச்சுற்றுச் சவ்வில் ஏற்படும் தாக்கத்தினால் இதயச்சுற்று பாயின் அளவு அசாதாரணமாக அதிகரித்தல்.

3. நிணநீர்க்கணுக்களில் தாக்கம் ஏற்பட்டு அழற்சி ஏற்படுவதால் நிணநீர்க்கணுக்கள் வீங்குதல் குறிப்பாக கழுத்து நிணநீர்க்கணு வீக்கமடையும்.

4. மூளை மென்சவில் அழற்சி ஏற்படல் நோய்த் தாக்கத்தினால்.

5. முள்ளந்தண்டு என்பில் கிருமித்தாக்கத்தால் முள்ளந்தண்டு அரிக்கப்படல்.

6. சிறுநீரகத்தில் கிருமிகளின் பெருக்கத்தால் சிறுநீர்ப்பாதை பாதிக்கப்படல்.

7. குடற்பகுதியில் கிருமித்தாக்கத்தினால், வயிற்றினுள் பாயிசேரலும் , வயிறு வீங்கலும்.

8. கண்களில் கிருமித்தாக்கத்தினால் கண்கடி ஏற்படல்.

9. பெண்களின் சனனித் தொகுதியில் கிருமித்தாக்கத்தினால் குழந்தைப் பேறு தடைப்படல்.

சுவாசச்சுற்று மென்சவ்வுடன் ஆரம்ப நிலை மாற்றங்கள் தொடர்புறுவதால் நுரையீரல் குழாய்களுடனும் , நிணநீர்களுடனும் தொடர்பு கொள்ளும் நிணநீர்க்கானுடனான பரவல், கழுத்து நிணநீர்க்கணுக்களில் வீக்கத்தைப் பொதுவாக ஏற்படுத்தும்.

குருதியின் ஊடான பரவல் உடனடியாக உடல் முழுவதும் ஏற்படலாம். இது "மிலியறி" காசம் எனப்படும். அல்லது மூளை மென்சவ்வைத் தாக்கும் மூளைக்காசம் ஏற்படுத்தும். குருதியின் மூலம் படிப்படியாக என்பு , மூட்டு ,சிறுநீரகம் எனப் பல அங்கங்கள் தொற்றுக்கு உள்ளாகலாம்.

இதன்போது பொதுவாகப் பாதிக்கப்படும் அங்கங்கள் நுரையீரல், என்புமச்சை, ஈரல், மண்ணீரல் ,விழித்திரை என்பனவாகும். சிலவேளைகளில் பாதிக்கப்படும் அங்கங்கள் சூலக்கான், கழுத்து நிணநீர்க்கணு, மூளை மென்சவ்வு, சிறுநீரகம், அதிரீனல் என்பு, இதயம் , வன்கூட்டுத்தசை ,தைபிரொயிட் சுரப்பி, சதையி என்பவற்றில் அரிதாக ஏற்படும்.

நோய்க்கிருமிகள் சுவாசப்பை , மூளை , இருதயம், முள்ளந்தண்டு, குடல்,நிணநீர்க்கணு, என்பு என்பவற்றைத் தாக்கும். நோய்க்கிருமி தொற்றி நுரையீரல் மென்சவ்வை 6-7 மாதத்தில் தாக்கும். நுரையீரலில் சேதத்தை 3-7 மாதத்தில் ஏற்படுத்தும். மூளையை 1-3 மாதத்தில் தாக்கும், என்பினை 1-3 வருடத்திலும் சிறுநீரகத்தை 5-7 வருடத்திலும் தாக்கும். நோய்க்கிருமி தொற்றியும் நோய் ஏற்படுவதை வயது, வேறு நோய்கள் உடற்போசணை நிலைமை உடலின் நோய் எதிர்ப்புசக்தி என்பன தீர்மானிக்கின்றன. நோய்க்கிருமித் தொற்றின் 2 வருடங்களுக்கு நோய்த்தாக்கம் ஏற்படும் நிகழ்தகவு கூட காச நோய்க்கிருமிகளில் கொழுப்புக் கூடிய கல மென்சவ்வாக உள்ள தால் இலகுவில் அழிக்கப்படமுடியாதது. (தொடரும்)



Dr.சி.யமுனானந்தா, MBBS,DTCD
மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி,
மார்புநோய் சிகிச்சை நிலையம்,
பண்ணை,யாழ்ப்பாணம்.

## லசந்த விக்ரமதுங்க படுகொலைச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் தாமதமடையலாம்

### பயங்கரவாத தடுப்பு பிரிவினர் தெரிவிப்பு

(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் அமரர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் மேலும் தாமதமடையலாம் என பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி விசாரணைகள் நடத்தப்படுவதனால் இக் காலதாமதம் ஏற்படுவதாக தெரிவித்துள்ளனர்.

லசந்த விக்ரமதுங்க படுகொலைச் சம்பவம் குறித்த வழக்கு கல்கிஸை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் நுவரெலியா வாகனம் திருத்தும் நிலையமொன்றின் உரிமையாளர் ஜேசுதாசன் என்பவரையும் இராணுவப் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர் ஒருவரையும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த சந்தேக நபர்களை எதிர்வரும் 24 ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## எதிர்க்கட்சியினரின் முறைப்பாடுகளை பொலிஸார் ஏற்றுக் கொள்வதில்லை

### கரு ஜயசூரிய எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)



எதிர்க்கட்சியினரின் முறைப்பாடுகளை பொலிஸ் தரப்பினர் ஏற்றுக்கொள்வதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய குற்றம் சுமத்தியுள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சித் சபைத் தேர்தல் கள் நியாயமான முறையில் நடத்தப்பட்டால் ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றியை எவராலும் தடுக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் ஆணையாளரின் உத்தரவுகளை பொலிஸ் மா அதிபர் பின் பற்றுவதில்லை எனவும் கடைநிலைப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் சுயாதீனமாக செயற்பட முயற்சித்த போதிலும் உயர் அதிகாரிகள் அதற்கு இடமளிப்பதில்லை என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை இந்தத் தேர்தலில் அரசாங்கம் தோல்வியடைந்த மாத்திரத்தில் ஆட்சியைக் கவிழ்க்க முடியாது என ஜனாதிபதி தெரிவித்துள்ளதாகவும் இதன் மூலம் அரசாங்கம் தோல்வியை எதிர்பார்த்திருப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமர வீர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சித் சபைத் தேர் தலில் வெற்றியீட்ட முடியும் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு கிடையாது அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

## தையல்,அழகியல் பொருட்களின் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவின் மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் நடாத்தப்படும் தையல், அழகியல் பொருட்களின் கண்காட்சி இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணிக்கு அராலி தெற்கு யா/ சரஸ்வதி மகா வித்தியாலத்தில் வலி. மேற்கு கிராம அபிவிருத்தி சங்க சமாசத் தலைவர் வி. சிவஞானபோசன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும் வலிகாமம் மேற்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமான முருகேசு சந்திரகுமார், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் ஜே.ஜே. பெலிசியன், வலி.மேற்கு பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு, கிராம அபிவிருத்தித் திணைக்கள மாவட்ட உத்தியோகத்தர் திருமதி நவமணி ஜெயராஜன், யா/ சரஸ்வதி மகா வித்தியாலய அதிபர் மா. சோமசேகரம், இளைப்பாறிய வலி.மேற்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் என். தேவநாயகம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2)

## மின்தடை அறிவித்தல்

மின்மார்க்கங்களில் கட்டமைப்பு வேலைகள் செய்யும் பொருட்டு இன்று சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை புத்தூர் , வாதரவத்தை , வீரவாணி , ஆவரங்கால் , ஊறனி ஆகிய இடங்களிலும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8மணி முதல் மாலை 5 மணிவரை கொட்டடி , நாவாந்துறை, மீனாட்சிபுரம் , காக்கைதீவு , யாழ்ப்பாணப் பட்டணப்பகுதி ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ச)

## செயலமர்வு

(கிளிநொச்சி)

தொழில் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சினால் தொழிற்பயிற்சி தொடர்பான செயலமர்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள மாவட்ட தொழிற் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் கலந்து கொள்வோர் தகைமைச்சான்றிதழ்களுடனும் சுயவிபரக்கோவையுடனும் கலந்து கொள்ளுமாறு தொழிற் திணைக்களத்தினர் கேட்டுள்ளனர். (ஸ்ரீ-3-30)



யாழ். மணிக்கூட்டு வீதியின் குறுக்கே முப்பது வருடங்களுக்கு மேலாக புனரமைப்பு செய்யப்படாது இருந்த கழிவு நீரோடும் வடிகாலை நேற்று முன்தினம் யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினர் புனரமைப்பு செய்வதைப் படத்தில் காணலாம். (படம்:- எஸ். கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரியில் மாணவர்களுக்கான சின்னம் சூட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ். மாவட்ட சமுர்த்தி அதிகார சபை இணைப்பாளர் ஆ.இரகுநாதனும் அவரது பாரியாரும் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் மாணவத் தலைவன் ஆர்.விதுசன் உரை நிகழ்த்துவதையும் பிரதம விருந்தினரின் பாரியார் மாணவத் தலைவிக்கு சின்னம் சூட்டுவதையும் அருகில் வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா,கல்லூரி அதிபர் வே.சிவசிதம்பரம் மற்றும் கல்லூரி அபிவிருத்திச் சங்கச் செயலாளர் பி.ஜெயக்குமார் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பருத்தித்துறைச்செய்தியாளர்)

## வினைத்திறன்காண் பரீட்சை முன்னோடிக் கருத்தரங்கு

நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களுக்கான வினைத்திறன்காண் பரீட்சையை முன்னிட்ட பரீட்சை மீளாய்வுக் (Revision) கருத்தரங்குகள் இன்று சனிக்கிழமை தொடக்கம் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் சேவையைச் சேர்ந்த சகல அலுவலர்களும் கலந்துகொள்ள முடியும். பரீட்சைக்கு முன்னிலைப் படுத்தப்படும் அல்லது எதிர்பார்க்கப்படும் வினாக்கள் நிதி, நிர்வாக திட்டமிடல் வழிமுறைகள் தொடர்பாக ஏற்படும் ஐயங்கள், புதிய அணுகுமுறைகள் எதுவும் இருப்பின் அவை பகிரங்கப்படுத்தப்பட்டு விவாதிக்கப்படுவதுடன் உரிய விளக்கங்களும் அணுகுமுறைகளும் அனுபவிக்க வள ஆளணியினர்களால் தெரிவுபடுத்தப்படும் என்பதனால் இவை தொடர்பாக அனைத்து அலுவலர்களும் முன்னாயத்த நிலையில் சமுகமளிக்கும்படி வட மாகாண அரச சேவை பட்டதாரி அலுவலர் சங்க செயலாளர் அறிவித்துள்ளார். வினைத்திறன் காண் பரீட்சை எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## ஒழுக்காற்று நடவடிக்கைக்கு எதிரான இடைக்காலத் தடைநீடிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட அக்கட்சியின் 7 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் விதிக்கப்பட்டிருந்த இடைக்கால தடையை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மார்ச் 30 ஆம் திகதி வரை நேற்று முன்தினம் நீடித்தது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐ.தே.க. பட்டியலில் எம்பியாக தெரிவாகியதன் பின்னர் அரசாங்கத் தரப்புக்கு மாறிய முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்போவதாக ஐ.தே.க அறிவித்திருந்தது.

இதற்கு தடை விதிக்குமாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான தற்போதைய நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ரி.ஹசன் அலி, பசீர் சேகுதாவூத், எம்.தௌபீக், பைஸால் காஸிம், எச்.எம் .மொஹமட் ஹரிஸ், எம்.எஸ்.எம் அஸ்லம் ரவூப் ஹக்கீம் ஆகியோரின் சார்பில் தனித்தனியான மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

ஐ.தேக. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க ஆகியோர் இவ்வழக்கில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இம்மனு மீதான ஆட்சேபனையை அடுத்த வழக்குத் தவணையின் போது தாக்கல் செய்வதாக பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் நிலாந்தி பீரிஸ் தெரிவித்தார். மனுதாரர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ஜி.ஜி.அருள்பிரகாசம் ஆஜரானார். (ச-5)

## முன்னாள் புலி உறுப்பினர்களின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் விசேட திட்டம்

(கொழும்பு)

முன்னாள் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களின் கலைத்திறமைகளை வெளிக்கொணரும் நோக்கில் விசேட திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களின் கலாசார நிகழ்வுகள்,நாடகங்கள் போன்றவை நாடு தழுவிய ரீதியில் காட்சிப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய ஒரு தொகுதி புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு பிரபல சினிமா நடிகை அனோஜா விக்ரமசிங்க மேலதிக பயிற்சிகளை வழங்கவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட போராளிகளில் ஒருவருக்கு பிரபல நடிகை மாலினி பொன்சேகாவின் திரைப்படம் ஒன்றில் நடிப்பதற்கும் வாய்ப்பு வழங்கப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. சில முன்னாள் விடுதலைப் புலிப்போராளிகள் அபார திறமைகளை வெளிப்படுத்தி வருவதாக புனர்வாழ்வு ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

2011.03 12

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1610 - ஜேக்கப் டி லா கார்டி தலைமையில் சுவீடன் படைகள் மொஸ்கோவைக் கைப்பற்றின.

★ 1664 - நியூ ஜேர்சி பிரித்தானியாவின் குடியேற்ற நாடானது.

★ 1879 - ஆங்கிலோ - சூலு போர்: நூற்றுக்கும் அதிகமான ஆங்கிலப் படைகள் சூலுக்களினால் சுற்றிவளைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1894 - முதற் தடவையாக கொக்கா - கோலா மென்பானம் கண்ணாடிப் புட்டியில் அடைத்து விற்கப்பட்டது.

★ 1913 - அவுஸ்திரேலியாவின் வருங்கால தலைநகர் அதிகாரபூர்வமாக கான்பரா எனப் பெயரிடப்பட்டது. கான்பரா அமைக்கப்படும்வரையில் 1927 வரையில் மெல்பேர்ன் தற்காலிகத் தலைநகராக இருந்தது.

★ 1918 - 215 ஆண்டுகளாக ரஷ்யாவின் தலைநகராக இருந்த சென் பீட்டர்ஸ்பேர்க் தலைநகர் அந்தஸ்து மாற்றப்பட்டு மொஸ்கோ தலைநகராக்கப்பட்டது.

★ 1928 - கலிபோர்னியாவில் சென் பிரான்சிஸ் அணைக்கட்டு உடைந்ததில் 400 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.

★ 1938 - ஜேர்மனியப் படைகள் ஆஸ்திரியாவை ஆக்கிரமித்தன. அடுத்த நாள் இணைப்பு அறிவிக்கப்பட்டது.

★ 1940 - குளிர் காலப் போர்: பின்லாந்து மொஸ்கோவுடன் அமைதி உடன்பாட்டிற்கு வந்தது. கரேலியாப் பகுதி முழுவதும் சோவியத் ஒன்றியம் பெற்றுக் கொண்டது. பின்லாந்துப் படைகளும் மீதமிருந்த மக்களும் உடனடியாக வெளியேறினர்.

★ 1954 - சாகித்ய அக்கடமி இந்திய அரசினால் தொடங்கப்பட்டது.

★ 1967 - சுகார்ட்டோ இந்தோனேசியாவின் ஜனாதிபதியானார்.

★ 1968 - மொரீசியஸ் பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்றது.

★ 1992 - மொரீசியஸ் பொதுநலவாய அமைப்பினுள் குடியரசானது.

★ 2003 - சேர்பியாவின் பிரதமர் சொரான் டின்டிச் கொல்லப்பட்டார்.

★ 2006 - தென்னாபிரிக்கா ஒரு நாள் சர்வதேச துடுப்பாட்டமொன்றில் 438/9 ஓட்டங்களைப் பெற்று அவுஸ்திரேலியாவை (434) வென்று சாதனை படைத்தது.

★ 2007 - கலிபோர்னியாவில் ஏற்பட்ட பெரும் காட்டுத்தீயினால் 2 ஆயிரம் ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலப்பரப்பு எரிந்து நாசமடைந்தது.

### பிறப்புகள்

★ 1925 - லியோ எசக்கி, நோபல் பரிசு பெற்ற ஜப்பானியர்

★ 1984 - ஷ்ரேயா கோஷல், பாடகர்

### இறப்புகள்

★ 1991 - றாக்னர் கிறனிற், நோபல் பரிசு பெற்றவர் (பி.1900)

★ 2006 - சுந்தரிபாய், தமிழ்த்திரைப்பட நடிகை.

1993-மும்பையில் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்புக்களில் 300பேர் கொல்லப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண், பெண் வேறுபாடு பார்ப்பது உண்மையில் அவசியமில்லை

ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பு வேதங்கள் தளைத்த காலத்தில், இருந்த சமூகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் பெரிய அளவில் வித்தியாசங்கள் இல்லை. இருவரும் எல்லாவற்றிலும் சமமாகப் பங்கு கொள்ள முடிந்தது.

"ஜனகரின் சபையில் யக்ஞவாக்கியர் என்ற பெரும் பண்டிதருக்கும், மைத்ரேயி என்ற பெண்ணிற்கும் ஆன்மீகம் தொடர்பாக வாக்குவாதம் சில நாட்கள் தொடர்ந்து நடந்தது. யக்ஞவாக்கியரின் அத்தனை கேள்விகளுக்கும் மைத்ரேயியால் விடை சொல்ல முடிந்தது. ஆனால், மைத்ரேயியின் சில நுட்பமான கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் யக்ஞவாக்கியர் திணறும் நிலைமை வந்தது. அவமானத்துடன் அவள் பாதங்களில் வீழ்ந்து யக்ஞவாக்கியர் தன்னை அவளுடைய சீடராக ஏற்கும்படி கோரினார்" என்று புராணம் சொல்கிறது. அந்த அளவிற்குப் பெண்களின் பெருமை ஓங்கியகாலம் உண்டு.

ஓர் ஆணால் உணரமுடியாத சில நுட்பமான உணர்வுகளை ஒரு பெண்ணால் உணரமுடியும். ஆண் தன்னுடைய புத்தியால் செலுத்தப் படுகிறான். பெண்ணோ தன்னுடைய உள்ளுணர் வால் செலுத் தப்படுகிறாள்! புத்தி என்பது வெளியிலிருந்து சேக ரித்தது. எந்தத் தரத்தில் கிடைத்ததோ, அந்தத் தரத்தில்தான் செயல்படும். உள்ளுணர்வு வெளி அழுக்குகளால் அசிங்கப்படாதது, தூய்மையானது. புத்தியைவிட உயர்வானது. அதனால், பெண்கள் ஆண்களைவிட உணர்வுகளில் மேம்பட்டிருக்கிறார்கள்.

அப்புறம் பெண்களுக்கு ஏன் மரியாதை மறுக்கப்படுகிறது? எந்தக் காலகட்டத்திலும், உடல்ரீதியாக ஆண் என்பவன் பெண்ணைவிடப் பலம் மிகுந்தவனாக விளங்குகிறான். ஒரு தேசத்திற்குள் வெளியார் படையெடுத்துவர ஆரம்பித்ததும், முதலில் பெண்களைத்தான் குறிவைத்தார்கள். உடலளவில் பலம் குறைந்தவர்களாக இருந்த பெண்களை அந்நியர்களிடமிருந்து காப்பாற்றும் பொறுப்பு ஆண்களுக்கு வந்தது. பெண்களை வெளியே நடமாடவிடாமல் வீட்டிற்குள் அடைத்து வைக்கும் வழக்கம் அப்போதுதான் ஆரம்பித்தது.

ஆணை முன்னிலைப்படுத்தி சமூக விதிகள் வகுக்கப்பட்டன. அதிகாரத்தை ருசிகண்டபின் இன்றுவரை அதை மாற்ற ஆண்வர்க்கம் விரும்பவில்லை. ஒரு பெண் பிறக்கும் முன்பே அவளுடைய சுதந்திரத்தைப் பறிக்கவல்ல சாஸ்திரங்களை ஆண் எழுதி வைத்தான். பாரத தேசத்தில் மட்டுமல்ல, உலகின் பல பாகங்களில் ஆண் தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளச் செய்த இந்தத் தந்திரங்களுக்கு பெண் பலியானாள். நூறு வருடங்களுக்கு முன்பு, சிலஆசிய நாடுகளில் ஆணைக் கொன்றால் மரணதண்டனை; பெண்ணைக் கொண்றால் பாவமில்லை என்ற அளவில்கூட சட்டங்கள் அமைக்கப் பட்டு இருந்தன.

இந்தச் சட்டங்களை ஆண்கள் இயற்றியது ஏன்? அடிப்படையில் பெண்ணைத் தன்னைவிடத் தாழ்ந்தவளாக அவன் நினைத்துவிட்ட தைரியத்தால் அல்ல. பெண் தன்னை விட மேன்மையானவள் என்பதைப் புரிந்து கொண்ட ஆழமான அச்சத்தால். எதற்காகப் பெண்ணைப்பார்த்து ஆண் பயப்படுகிறான்?

மாபெரும் அறிவாளியாக இருந்த ஒருவனுக்கு, பள்ளிக்கூடம் ஒன்றில் குழந்தைகளுக்கான வகுப்பை எடுக்கும் ஆசிரியர் வேலைதான் கிடைத்தது.

வகுப்பில் ஒருநாள் இந்த பூமி உருண்டையின் பாரம் எவ்வளவு என்று யாருக்காவது தெரியுமா? என்று கேட்டான். மாணவக் குழந்தைகள் பெற்றோர்களைப் போய்க் கேட்டுத் தொந்தரவு செய்தனர். பாதிப்பெற்றோர்களுக்குச் சரியான பதில் தெரியவில்லை. குத்துமதிப்பாக ஒரு பதிலைச் சொல்லி அனுப்பினார்கள். மறுநாள் வகுப்பில் குழந்தைகள் ஆளுக்காள் ஒவ்வொரு பதில் சொன்னார்கள்.

"எல்லாமே தப்பு" என்றான் அறிவாளி. கரும்பலகையில் பல இலக்க எண் ஒன்றை எழுதி "இது தான் பூமியின் உண்மையான எடை" என்றான்.

"சார் எனக்கு ஒரு சந்தேகம்..." என்று ஒரு குழந்தை எழுந்தது "நீங்கள் சொன்ன எடை பூமியில் வசிக்கும் மக்களோடு சேர்த்தா, மக்கள் இல்லாமலா?"

அறிவாளி பதில் இல்லாமல் திக்கினான். திணறினான்.தலை குனிந் தான்.

எப்பேர்ப்பட்ட அறிவாளியாக இருந்தாலும் புரிந்து கொள்ள முடியாத சில விடயங்கள் பூமியில் இருக்கின்றன. அவற்றில் முக்கியமானவ, பெண்! உலகின் பல விடயங்களை வ.ஞ்ஞான பூர்வமாகப் பகுத்துப் புரிந்து கொள்ள ஆணுக்குத் தெரிந்திருந்தது. ஆனால், அவனுக்கு அருகிலேயே இருந்த பெண்ணின் நுட்பமான உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியா மல் போனது. புரிந்து கொள்ள முடியாத தின்மீது இயல்பாகவே அச்சம் வரும். அச்சத்தால் பெண்ணை ஏறிட்டுப் பார்க்கவிடாமல், தன்முரட்டுத் தனத்தால் தாழ்த்தி வைத்தான். தன் உடல் வலு வைப் பிரயோகித்து, புத்தியின் தந்திரங்களைப் பயன்படுத்தி அவளைத் தன்நிழலில் வைத்திருக்க... செய்யவேண்டியதை எல்லாம் செய்து முடித்தான். பெண்களாவது துணிச்சலுடன் எழுந்து இந்த நிலையை வளரவிடாமல் தடுக்கப் பர்த்தார்களா? இல்லை!




ஆன்மீகம் 42

தீவிரமான வாழ்க்கை வாழ்வதை நிறுத்திக்கொண்டு, ஆண்களின் நிழலில் வாழ்வதை அவர்களும் ஏற்றுக் கொண்டார்கள். உண்மையில் ஆணுக்குப் பெண்ணோ, பெண்ணுக்கு ஆணோ தாழ்ந்தவர் இல்லை! ஆண், பெண் என்று இருவரையும் வித்தியாசப்படுத்திப் பார்க்க வேண்டிய அவசியமேயில்லை. இரண்டுபேரும் இல்லாமல் குடும்பமோ, சமூகமோ, உலகமோ, எதுவுமே முழுமையடையாது!

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# தமிழ் நாவல்கள் சில நோக்கங்கள்

07



ஜெயகாந்தனின் காலத்தில் எழுத்துத்துறையில் ஈடுபட்டவர்கள் உண்மையில் காத்திரமான படைப்பாளிகளாக இருந்தனர். இந்திரா

**"கொழும்பில் நடைபெற்ற சர்வ தேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

பார்த்தசாரதி, தி.ஜானகிராமன், நீலபத்மநாபன், சா.கந்தசாமி, ஹெப்சிபா யேசுதாசன், கு.சின்னப்பபாரதி, சு.சமுத்திரம், சுஜாதா, ரா.சு.நல்லபெருமாள், டி.செல்வராஜ், பொன்னீலன், ப.சிங்காரம், பா.ஜெயப்பிரகாசம், சி.சு.செல்லப்பா, அசோகமித்திரன், சிவசங்கரி, இந்துமதி, பாலகுமாரன், இலங்கையில் கே.டானியல், செங்கை ஆழியான், செ.யோகநாதன், தி.ஞானசேகரன் என அப்பட்டியல் நீளும்.

இந்த நாவலாசிரியர்கள் அனைவரும் நாவல் இலக்கியத்தின் ஆக்கக் கூறுகளை நன்கு அறிந்துள்ளனர். அவர்தம் நாவலுக்கு எடுத்துக் கொண்ட சூழற்களங்கள் தத்ரூபமாகச் சித்தரிக்கப்படுகின்றன. தனிமனித சிந்தனைகளிலிருந்து விடுபட்டு சமூகம், நாடு, உலகம் என்ற பரந்த சிந்தனைக்குள் பாத்திரங்கள் செல்கின்றன. புதுமை நோக்கமும் புரட்சிகரச் சிந்தனைகளும் கொண்ட பெண்கள் இந்நாவல்களில் வருகின்றனர். பாலுறவையும் பக்குவமாகப் பயன்படுத்தும் எழுத்துக்கள் வெளிந்துள்ளன. உளவியல், அறிவியல் சம்பந்தமான சிந்தனைகள் நாவல்களில் புகுத்தப்பட்டுள்ளன. சமூகக்கட்டவிழ்ப்பு நாவல்கள் இவற்றில் உள்ளன. காந்தியக்கொள்கைகள் மார்க்சியக் கோட்பாடுகள் பெரியாரிசம் முதலான சிந்தனைகளை இந்தநாவல்களில் காணலாம். மக்களின் பேச்சுமொழி சிறப்பாக இந்த நாவல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. வட்டாரத் தமிழ் இந்நாவல்களில் சிறப்புற்றிருக்கின்றது. உத்தி, உருவம், நடை என்பனவற்றில் புதிய போக்குகளை இந்நாவல்களில் காணலாம். சமூகத்திற்கும் பிரதேசத்திற்கும் ஒட்டிய பாசாங்கற்ற உரையாடலை இந்த நாவல்களில் காணலாம். பாத்திர வார்ப்புக்கேற்ற உரையாடல்களையும் காணலாம்.

**நடப்பியற்காலம்**

நடப்பியற்காலத்தில் தமிழ்நாவல் இலக்கியத்தின் எண்ணிக்கையில் அதிகமான படைப்புக்கள் வெளிவந்துள்ளன. இக்காலத்தில் மேலோங்கி நிற்கின்ற இயல்புகள் தலித் சிந்தனையாகவுள்ளன. ஆதலால் அதனை தலித் காலம் எனவும் வகுக்கலாம். சாதியச் சிந்தனைகள் தமிழகத்தில் இன்று முனைப்புப் பெற்ற சமூகப் போராட்டங்களாகவும் இலக்கிலக்கிய அம்சங்களாகவும் விரிவடைந்துள்ளன. நடப்பியல் காலப்படைப்பாளிகளில் ஜெயமோகன், வண்ணநிலவன், அஸ்வகோஷ், வண்ணதாசன், அம்பை, பிரபஞ்சன், பாவண்ணன், தோப்பில் முஹமதுமீரான், ஐசெக்அருமைராசன், ராஜ்கௌதமன், பூமணி, இமையம், பாமா, அறிவழகன், மேலாண்மை பொன்னுசாமி, எஸ்.ராமகிருஸ்ணன், அழகியபெரியவன், ஆ.மாதவன், ஷோபாசக்தி, முதலானோரைக் குறிப்பிடலாம்.

மார்க்சியப் பார்வையுடன் இந்தப் படைப்பாளிகள் சமூகத்தைப் பார்த்தார்கள். நமது ஏமாற்றங்களையும் வேதனைகளையும் வலிகளையும் தம் படைப்புக்களில் விமர்சித்தார்கள். வர்க்க முரண்பாடுகளையும் சாதிய இழிநிலைப் பிரச்சினைகளையும் தம் நாவல்களின் பொருளாகக் கொண்டார்கள். அருவருப்போடு அதுவரை பயன்படுத்தாது ஒதுக்கிவிடப்பட்ட சில சொற்கள் இவர்களின் நாவல்களில் பயன்படுத்தப்பட்டன. தீட்டுப் பொருள் என்பது இவர்களிடம் இருக்கவில்லை. இவர்களின் தேடலிலும் பார்வையிலும் அவதானிப்பிலும் முன்னைய படைப்பாளிகளிடம் காணாத சங்கதிகள் என்பன அடங்கியிருந்தன. கதாபாத்திரங்கள் உயிரோட்டமானவையாக அமைந்திருக்கின்றன. இக்காலத்தில் ஈழத்தைப் பொறுத்தமட்டில் கே.டானியல், செங்கை ஆழியான், செ.யோகநாதன், தெணியான், கோகிலாமகேந்திரன், தாமரைச்செல்வி, தேவகாந்தன் முதலானோர் நவீன நாவல் இலக்கியத்தில் தம் பங்களிப்பைச் செய்துள்ளனர்.

நாவல் என்ற பெயரில் சுந்தரராமசாமி, ஜெயமோகன், கோணங்கி என்போர் பரிசோதனைப் படைப்புக்களை எழுதியுள்ளனர். சுந்தரராமசாமியின் ஜே.ஜே. சிலகுறிப்புக்கள், ஜெயமோகனின் விஷ்ணுபுரம், கோணங்கியின் எழுத்துக்கள் ஆகிய பரிசோதனைப் படைப்புக்களை நாவல் என்ற

**கலாநிதி செங்கைஆழியான் க.குணராசா**

பெயரில் எழுதித் தந்துள்ளனர். உண்மையில் கூறுவதாயின் இவை நாவல்களேயல்ல. இவர்களது நாவல்களில் யதார்த்தப்பண்பு இருக்காது. 'மனம் போன போக்கில் கிறுக்கி வைத்ததை வாசகர்கள் மீது சுமத்துகின்ற மனப்பாங்கு இருக்கின்றது.தமிழில் இதுவரை வெளிவந்திருக்காத, நாவல் இலக்கியத்துடன் இலக்கியரீதியாக ஒப்பிட்டுக்கூற முடியாது, தான்தோன்றித்தனமாய் தன்னை வடிவமைத்துக் கொண்டு வெளிவந்திருக்கிறது' என தா.ராசு போன்றோர் சுந்தரராமசாமியின் ஜே. ஜே. சில குறிப்புகள் பற்றிக்குறிப்பிடுவர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.எஸ்.பி.வரிச்சலுகை இன்றியே பொருளாதாரத்தை முன்னெடுக்க முடியும்

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்பட்டு வந்த ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகைத் திட்டம் இன்றியே பொருளாதாரத்தை முன்னெடுக்க முடியும் என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

குறித்த வரிச்சலுகை இன்றியே சர்வதேச சந்தையில் இலங்கைப் பண்டங்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைப் பண்டங்களை சர்வதேச சந்தையில் விற்பனை செய்வதற்கு தொடர்ந்தும் சலுகைத் திட்டங்கள் அவசியமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறந்த தரம் மற்றும் வினைத்திறனை அதிகரிப்பதன்மூலம் சர்வதேச சந்தையில் இலங்கைப் பண்டங்களை விற்பனை செய்ய முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரசல்ஸ்சில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். வரிச்சலுகைத் திட்டம் நிராகரிக்கப்பட்டதுடன் மிகைப்படுத்தப்பட்ட வகையில் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைத் திட்டம் இரத்து செய்யப்பட்டால் பாரியளவு தொழில்வாய்ப்புகள் இழக்கப்படும் எனவும் பொருளாதாரம் நலிவடையும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சைவசமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் செயல்முறைப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை- சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகம் வருடம் தோறும் நடத்தி வரும் செயல் முறைப் போட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் கோலம்போடுதல், மாலை கட்டுதல் , தோரணம் பின்னுதல் ஆகிய செயல்முறைப் போட்டிகள் மத்திய பிரிவு, மேற்பிரிவு எனும் இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளுக்கு பல்வேறு பாடசாலைகளை சேர்ந்த மாணவர்கள் உட்பட 360 போட்டியாளர்கள் தோற்றவுள்ளனர். இவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாவும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் போட்டிகளுக்குரிய பொருட்களை போட்டியாளர்களே கொண்டு வர வேண்டுமெனவும் பரீட்சையின் செயலர் சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-9)

## அறவழிப்போராட்டக்குழுவின் 32ஆவது வருட சேவையை முன்னிட்ட நிகழ்வுகள்

அறவழிப்போராட்டக்குழுவின் 32 ஆவது வருட சேவை நிறைவை முன்னிட்டு சக்கரநாற்காலிகள், துவிச்சக்கரவண்டிகள் மற்றும் மறவன் புலோ காணிகள், உரிமைக்கான உறுதிகள் வழங்கல் நிகழ்வுகள் எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அறவழி செயலகத்தில் அறவழி செயலக தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினரக பிரான்ஸைச் சேர்ந்த க.முத்துக்குமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார். இந்நிகழ்வில் அனைவரையும் பங்குபற்றி சிறப்பிக்குமாறு அறவழிப் போராட்டக்குழுவினர் கேட்டுக்கொள்கின்றனர். (ஸ்ரீ-9)

## வாகனம் மரத்துடன் மோதி இராணுவ அதிகாரி பலி

(கொழும்பு)

இராணுவத்தினர் பயணித் துக் கொண்டிருந்த வாகனம் மரமொன்றுடன் மோதியதில் இரண்டாவது லெப்டினன் தரத்தைச் சேர்ந்த இராணுவ அதிகாரி ஒருவர் பலியாகியுள்ளதுடன் மேலும் 5 இராணுவ வீரர்கள் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் மின்னேரியாப் பகுதியில் நேற்று அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றது.

காயமடைந்த 5 இராணுவ வீரர்களும் சிகிச்சைக்காக பொலனறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மின்னேரியாப் பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

## 2017 வரை ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படமாட்டாது

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

2017ஆம் ஆண்டு வரையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படமாட்டாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

2017ஆம் ஆண்டுக்கு முன்னார் ஜனாதிபதித் தேர்தலோ 2016 ஆம் ஆண்டுக்கு முன்னர் பொதுத் தேர்தலோ நடத்தப்படமாட்டாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு கனவு காண்பவர்கள் எதிர்வரும் 2016ஆம் ஆண்டுவரையில் காத்திருக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தையா செல்லம்மா



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொண்ட திருமதி கந்தையாசெல்லம்மா நேற்று முன்தினம் (10.03.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும்,காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், செல்வராணியின் பாசமிகுதாயும், செ.பத்மநாதனின் (இ.போ.ச. முன்னாள் நடத்துநர்) அன்பு மாமியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் சகோதரியும், தயாபரன்-பத்மராணி (நோர்வே), சுதர்சன்-சாந்தி (நோர்வே), அனுஷன்-வாணி (நோர்வே) மற்றும் ராஜ்குமார்- லேக்கா (லதா- இந்தியா) ஆகியோரின் பேர்த்தியும், அபூர்வன் (நோர்வே), வையகன் (நோர்வே),நர்த்தனா (நோர்வே), கெவிஷன் (நோர்வே),மொரிஷன் (நோர்வே), டிலக்ஷன் (நோர்வே),மர்வின் (நோர்வே),மௌலின் (நோர்வே), சந்தோஷ் (நோர்வே), ராதயன் , லக்மிலா,சீதயன் (இந்தியா) ஆகியோரின் அன்பு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.03.2011) வெள்ளிக்கிழமை பி.ப. 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் குச்சப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.*
*தொ.பே.021 3006560*

*தகவல்:*
*செ.பத்மநாதன்*
*(மருமகன்)*

(சி/2610)

## கந்தையா பேரம்பலம்



கைதடி,நுணாவிலை பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பேரம்பலம் நேற்று முன்தினம் (10.03.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னத்தங்கச்சி தம்பதியினரின் மகனும், பவளம்மாவின் அன்புக் கணவரும், அருணாசலம், ரத்தினம் (கிளி), ராஜேஸ்வரி, இந்திராணி, பாலசிங்கம்,"சிங்கராசா (பிரான்ஸ்), துரைசிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும், மனோரஞ்சினி, சிவகுருநாதன், பாலசுப்பிரமணியம், வாமதேவன், ஜெயவதி, கலாவதி (பிரான்ஸ்), சுயந்தினி ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.03.2011) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குச்சப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி, நுணாவில்,*
*சாவகச்சேரி.*
*தொ.பே.077 1102844*
*077 4084703*

*தகவல்:*
*மனைவி,பிள்ளைகள்,*
*பேரப்பிள்ளைகள்,*
*பூட்டப்பிள்ளைகள்.*

(சி/2611)




யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய அதிபர் அருட்சகோதரி மரியாஜீவந்தி குருத்துவ வாழ்வில் 25ஆவது ஆண்டை நிறைவு செய்தமையை முன்னிட்டு அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் சகிதம் அழைத்து வரப்படுவதையும் பாடசாலை ஆசிரியைகள் இருவர் அதிபருக்கு நினைவுப் பாமாலை வழங்குவதையும் மாணவர்களின் கலை நிகழ்வு ஒன்றையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு தமிழருவி மணியன் எழுதும் கடிதம்

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா அவர்களுக்கு... வணக்கம். வளர்க நலம். உங்களை நினைத்தால் ஒரு பக்கம்



வியப்பாகவும், இன்னொரு பக்கம் வேதனையாகவும் இருக்கிறது. அன்று முதல் இன்று வரை இது ஓர் ஆணாதிக்க உலகம். நீங்கள் இருந்த திரைப்பட உலகமும், நீங்கள் இருக்கும் அரசியல் உலகமும் முழுக்க முழுக்க ஆணாதிக்கத்தின் மோசமான ஆளுகைக்கு ஆட்பட்டவை. 1964-ல் ஸ்ரீதரின் 'வெண்ணிற ஆடை' படத்தில் முதன் முதலாக நீங்கள் அறிமுகமானபோது, தமிழகத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் முதலமைச்சர் நாற்காலியில் ஒரு நாள் அமரக் கூடும் என்று கண்ணுறக்க வேளையில் கனவு கூடக் கண்டிருக்க மாட்டீர்கள்! தமிழர்களின் ரசனை எல்லா வகையிலும் வித்தியாசமானது. திரைப்படங்களில் நாயக, நாயகியராய் இணைந்து நடித்த இருவரையும் முதல்வர் நாற்காலியில் அமரவைத்து அழகு பார்த்த வரலாற்றுச் சாதனை, உலகில் தமிழகத்தைத் தவிர வேறெங்கும் வாய்த்ததே இல்லை.

எம்.ஜி.ஆர்., சிவாஜி என்ற இருவரின் ஆதிக்கத்தில் கட்டுண்டு கிடந்த திரையுலகில் அடியெடுத்துவைத்த நீங்கள், இரு வேறுபட்டகுணாம்சங்கள் கொண்ட அந்தக் கலையுலகச் சிகரங்களோடு கை கோர்த்து உங்கள் தோற்றப் பொலிவினாலும், நடிப்புத் திறமையாலும் முதன்மைக் கதாநாயகியாக முன்னேறியதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை. ஆனால் கதாநாயகிக் கட்டம் முடிந்ததும் தமக்கையாய், தாயாய் வெடம் பூண்ட காலம் முழுவதும் ஒரு நடிகையாகவே வாழ்ந்து முடித்துவிட விரும்பாமல், எம்.ஜி.ஆர் ஆதரவில் 1981 இல் அரசியல் உலகில் கால் பதித்து, ஆர்.என்.வீரப்பன் போன்றவர்கள் விரித்து வைத்த சதிவலையை அறுத்தெறிந்து அவர்களால் இழைக்கப்பட்ட அவமானங்களை சகித்துக்கொண்டு, அ.தி.மு.கவை உங்கள் அசைக்கமுடியாத தலைமையின் கீழ் கொண்டுவந்தீர்களே...அந்த அரிய சாதனை உண்மையிலேயே வியப்பிற்கு உரியது!

உங்களுடைய விரிந்த வாசக ஞானம், தெளிந்த அங்கிலப் பேச்சு, தளராத தன்னம்பிக்கை, அபூர்வமான அரசியல் ஆளுமை, சர்க்கஸ் கூடாரத்தின் ரிங் மாஸ்ரரைப் போல் உங்கள் கட்சியின் அனைவரையும் ஆட்டிப் படைக்கும் அசாத்திய ஆற்றல் அனைத்தும் நீங்கள் வளர்த்துக்கொண்ட பலமான பாதுகாப்பு அரண்கள்.

எம்.ஜி.ஆர் கை தூக்கி விட்டதனால் தான் அரசியலில் நீங்கள் இந்த உயரத்தை எட்ட முடிந்தது என்பது பிழையான கருத்து, சரோயாதேவியும், லதாவும் எம்.ஜி.ஆரே விரும்பி அரசியலில் ஆளாக்க முனைந்திருந்தாலும், உங்களைப் போல் உருவாகியிருக்க முடியாது. எம்.ஜி.ஆர் மறைவிற்குப் பின்பு உங்கள் தலைமை வாய்த்திருக்காவிட்டால் அ.தி.மு.க ஓர் அரசியல் சக்தியாக நீடித்திருக்காது என்பதும் நிஜம்.

எல்லாம் சரி ஆனால், ஒரு கோட்டை எவ்வளவு பாதுகாப்பாக வடிவமைக்கப்பட்டிருந்தாலும் அதற்குள் சில பலவீனங்கள் புலப்படுவது இயல்பு. உங்கள் பலங்களுக்கு சமமாக பலவீனங்களும் பாதித்திருப்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? பரிசோதிக்கப்படாத வாழ்க்கை வாழத் தகுதியற்றது என்றார் சாக்கிரடீஸ். நீங்கள் பரிசோதித்துப் பார்த்து, பள்ளத்தில் வீழ்த்தும் பலவீனங்களில் இருந்து விடுபட விரும்பாதது தான் வேதனைக்குரியது.


காமராஜரைப் போலவோ, கலைஞரைப் போலவே படிப்படியாக அரசியலில் நீங்கள் வளர்ந்தவர் இல்லை. உங்கள் அரசியல் பிரவேசம் 1981 இல் அரங்கேறியது. உடனே அ.தி.மு.கவின் கொள்கைப் பரப்புச் செயலாளராக உயர்த்தப்பட்டீர்கள். 1988 இல் நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக பணியாற்றினீர்கள். 1989 தேர்தலுக்குப்பின்பு தமிழக சட்டமன்ற வரலாற்றில் எதிர்க்கட்சித் தலைவராக அமர்ந்த முதல் பெண்மணி என்ற பெருமை பெற்றீர்கள். நிதிநிலை அறிக்கையை முதல்வராக நின்று சட்டமன்றத்தில் கலைஞர் சமர்ப்பித்தபோது நீங்கள் உருவாக்கிய கலவர நாடகத்தில் நேர்ந்த விபரீதக் காட்சிகளின் விளைவாக மக்களின் அனுதாபத்தைப் பெற்று 1991 இல் கோட்டையில் முதல்வராக கொலு வீற்றீர்கள்.

யாருக்கும் எளிதில் கிடைக்காத வரம் தமிழக வாக்காளர்களால், உங்களுக்கு எளிதாக வளங்கப்பட்டது. எளிதில் கிடைக்கும் எதுவும் பெரிதாகப் போற்றப்படுவது இல்லை. வாக்காளர்கள் விருப்பத்தோடு வனைந்து கொடுத்த பதவிக் குடத்தை நீங்கள் நந்தவனத்து ஆண்டியைப் போல் கூத்தாடி போட்டுடைத்தீர்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழகத்தின் முதல் பெண் முதல்வர் நீங்கள். நேர்த்தியாக உங்கள் நிர்வாகம் நடந்திருந்தால்...

## பரிசோதிக்கப்படாத வாழ்க்கை வாழத் தகுதியற்றது

கலைஞர் மீண்டும் முதல்வராகும் வாய்ப்பே கனிந்திருக்காது. அவருடைய குடும்பமும் கோடிகோடியாய் பணத்தைக் குவிக்கும் சந்தர்ப்பம் பிறந்திருக்காது. கலைஞரின் குடும்பம் உங்களுக்குத்தான் அன்றாடம் நன்றி சொல்ல வேண்டும். அதிலும் குறிப்பாக, ஆ.ராசா உங்களுக்கு நிரம்பவும் நன்றிக்கடன் பட்டிருக்கிறார்.

அறிவியல் பூர்வமாக ஊழல் செய்தவர் கலைஞர் என்று சர்க்காரியா சொன்னதை உரத்த குரலில் ஊரூராய் முழங்கிய நீங்கள் ஊழலின் நிழல் படாத உன்னதமான ஆட்சியை வழங்கிவிடவில்லை. அதிகார துஸ்பிரயோகம், ஆணவப் போக்கு, சொத்துக் குவிப்பு, ஊழலில் திளைத்த அமைச்சர் குழு, விமர்சனங்களை விரும்பாத சர்வாதிகாரச் சாயல், பழிவாங்கும் மனோபாவம் பொன்றவை வாக்காளர்களுக்கு எரிச்சலை ஏற்படுத்தியதால், உங்கள் மீது இருந்த நம்பிக்கை நலிவடைந்தது. ஸ்பிக் விவகாரத்தில் உங்கள் விருப்பத்திற்கு வளைந்து கொடுக்காத ஐ.ஏ.எஸ் அதிகாரி சந்திரலேகாவின் முகத்தில் ஆசிட் வீசப்பட்டதன் பின்புலம் அறியாமல் தமிழகம் அதிர்ந்தது. திமுக வழக்கறிஞர் சண்முகசுந்தரத்தின் மீது நடத்தப்பட்ட கொடுமையான தாக்குதலின் பின்னணி புரிந்ததும் நல்ல அரசியலை நாடுவோர் நெஞ்சம் நடுங்கியது. எல்லாவற்றிற்கும் சிகரம்போல் சசிகலா குடும்பத்தினரின் ஆதிக்கம் அமைந்து விட்டது. உங்கள் வளர்ப்பு மகன் சுதாகரனுக்கு நீங்கள் நடத்தி வைத்த திருமணத்தில் பளிச்சிட்ட ஆடம்பரம் பாமர மக்களைக்கூட முகம் சுழிக்க வைத்தது. உங்கள் வீழ்ச்சி கலைஞரின் வியூகத்தில் வளைந்துவிடவில்லை. உங்களுக்கான பள்ளத்தை நீங்களே வெட்டிய விதம்தான் பரிதாபத்திற்குரியது.



முன்னாள் முதல்வரே..... கடந்த காலத்தை இன்று நிதானமாகத் திரும்பிப் பார்த்த நீங்கள் கற்றறிய வேண்டிய பாடங்கள் கணக்கற்றவை. மிகுந்த நம்பிக்கையுடன் மக்களால் 1991 இல் ஆட்சியில் அமர்த்தப்பட்ட நீங்கள் 1996 தேர்தலில் மிக மோசமாகப் புறக்கணிக்கப் பட்டீர்கள். உங்கள் அமைச்சரவையில் இடம்பெற்ற அனைவரும் தோற்கடிக்கப்பட்டனர் நீங்களே பர்கூர் தொகுதியில் மக்கள் அறியாத ஒரு மனிதரிடம் தோற்கும் நிலை நேர்ந்தது. சரிந்துவிட்ட உங்கள் அரசியல் செல்வாக்கை முற்றாக முடித்துவிட முதல்வர் பொறுப் பேற்ற கலைஞர் காரியத்தில் கண்வைத்தார். உங்கள்மீது 40 இற்கும் மேற்பட்ட வழக்குகள் தொடரப்பட்டன. சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு விரைவாக உங்களை சிறைக்கு அனுப்பிவைக்க அடித்தளம் அமைக்கப்பட்டது. கலைஞர் கண்ட கனவு நனவானது. நீங்கள் சிலகாலம் சிறைவைக்கப்பட்டீர்கள். டான்சி வழக்கு உங்கள் உறக்கத்தைக் கலைத்தது. சொத்துக் குவிப்பு வழக்கு "விடாது கருப்பு" என்பதுபோல் இன்றுவரை தொடர்ந்து உங்களைத் துன்புறுத்துகிறது. ஸ்பெக்ரம் ஊழலில் 1.76 இலட்சம் கோடியை நாட்டுக்கு நஸ்டம் ஏற்படுத்திய நேர்மையானவர்கள். நீங்கள் 60 கோடி சேர்த்து

**தமிழருவி மணியன்**

விட்டதை எதிர்த்து உச்ச நீதிமன்றம் வரை போனதும் இன்றுவரை கூச்சமில்லாமல் உங்கள் ஊழல் குறித்து வக்கணையா விமர்சிப்பதும் வேறு கதை.

ஒரே ஒரு ரூபாய் தவறாகப் பெற்றாலும் ஊழல்... ஊழல் தான். யார் செய்தாலும் ஊழல் தண்டனைக்கு உரியதுதான். ஐந்து ஆண்டு ஆட்சியில் நீங்கள் செய்த தவறுகள் மொத்தமாக முற்றுகையிட்டு உங்களை அடியோடு வீழ்த்தியதும், உங்கள் அரசியல் வாழ்வு அஸ்தமித்துவிட்டது என்றே அனைவரும் ஆரூடம் கணித்தனர். ஒழிந்தார் ஜெயலலிதா; அழிந்தது அ.தி.மு.க என்று மகிழ்ந்தது கலைஞரின் பரிவாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொத்த விற்பனை வரிக்குப் பதிலாக தேசத்தை கட்டியெழுப்புவதற்கான வரி

## இவ்வருடம் ஜனவரி முதல் நடைமுறை

(யாழ்ப்பாணம்)

மொத்த விற்பனை வரிக்குப் பதிலாக இவ்வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் தேசத்தை கட்டியெழுப்புவதற்கான வரி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட இறைவரித் திணைக்கள பிராந்திய அலுவலக பிரதி ஆணையாளர் பாலசுந்தரம் சிவாஜி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேற்குறிப்பட்ட இந்த வரிக்கான கொடுப்பனவுப்படிவங்கள் மற்றும் விபரத் திரட்டுக்கள் என்பன உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் தலைமையகத்தால் கணனி செயல்முறை மூலம் அனுப்பப்பட்டாலும் அதற்குரிய கணக்காய்வுகள் உள்நாட்டு இறைவரித்திணைக்கள யாழ்.பிராந்திய அலுவலகத்திலும் மேற்கொள்ளப்படும்.

இந்த வரிக்குரிய கொடுப்பனவுகள் மாதாந்தம் செலுத்தவேண்டியதுடன் வரி விபரத்திரட்டு காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

தற்போது உள்நாட்டு வரித்திணைக்கள தலைமையகத்தால் இவ் வரிக்கு பதிவு செய்யப்பட்டவர்களுக்கு ஜனவரி மாதத்திற்குரிய படிவங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

பங்குடமை வியாபாரத்தை தவிர ஏனைய தனிப்பட்டவர்கள் தமது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை தெளிவாகக் குறிப்பிட்டு ஜனவரி மாதத்திற்குரிய கொடுப்பனவுகளை எந்த இலங்கை வங்கிக் கிளையிலும் மேற்கொள்ள முடியும்.

மேலும் பங்குடமை வியாபாரத்திற்குரிய அடையாள இலக்கங்கள் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை செலுத்தவேண்டிய வரியை தீர்மானிக்கும் போது குறித்த காலப்பகுதிக்குரிய தமதுவிற்பனையில் 50 வீதத்தைக் கழித்து பின்பு ஏனைய 50 வீதத்தை விற்பனைக்கு 2 வீதப்படி இவ்வரியைச் செலுத்த வேண்டும். உதாரணமாக ஜனவரி மாத விற்பனை 8 இலட்சம் ரூபா எனில் அதன் 50 வீத விற்பனையான நான்கு இலட்சம் ரூபாவிற்கு 2 வீதப்படி 8 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும்.இலகுவாக கணிப் பதாயின் 8 இலட்சம் ரூபாவிற்கு நேரடியாக ஒரு வீத அடிப்படையில் 8 ரூபா என கணிப் பிடலாம்.

ஆனால் வரி விபரத்திரட்டை நிரப்பும் போது மிகக் கவனமான முறையில் கையாள வேண்டும். அனுப்பப்பட்ட வரிக் கொடுப்பனவுச் சீட்டில் காலப்பகுதி 11031 குறிப்பிட்டிருக்கும். இங்கு 11 என்பது ஆண்டையும் 03 என்பது மார்ச் மாதத்தில் முடிவடைந்த காலாண்டையும் 1 என்பது ஜனவரி மாதத்தையும் குறிப்பிடுகிறது.

இதேபோன்று பெப்ரவரி மாதத்திற்குரிய குறிப்பு இலக்கம் 11032 ஆகவும் மார்ச் ,ஏப்ரல் முறையே 11033, 11061 ஆகவும் அமையும். ஒவ்வொரு மாதத்திற்குரிய தேசத்தை கட்டியெழுப்புவதற்கான வரிக்கொடுப்பனவு அந்தந்த மாதத்தை உடன் அடுத்து வரும் மாதத்தில் 20ஆம் திகதிக்கு முதல் மேற்கொள்ளப் பட வேண்டும்.கொடுப்பனவுப் படிவங்கள் கிடைக்காதவர்கள் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் பெற முடியும் எனவும் மார்ச்சில் முடிவடைந்த காலாண்டுக்குரிய விபரத் திரட்டு ஏப்ரல் மாதம் 20ஆம் திகதிக்கு முன் அனுப்பப்படல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படுபவர்கள் யாழ். வீரசிங்கம் மண்டப 3ஆம் மாடியில் உள்ள இறைவரித்திணைக்கள பிராந்திய அலுவலகத்தில் நேரடியாகவே அல்லது 0212222076 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2-6)

## ஐ.தே.க.வேட்பாளர்கள் மீது துப்பாக்கிச்சூடு

கடவத்தையில் ஐக்கிய தேசியக் கட்சி அபேட்சகர் மீது நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடவத்தையில் ஐக்கிய தேசியக் கட்சியின் அபேட்சகர்கள் மற்றும் ஆதவாளர்கள் ஒன்றிணைந்து பிரசாரக் கூட்டம் ஒன்றிற்கான அலங்கார வேலைகளில் ஈடுபட்டிருந்த போதே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினர் மட்டும் பயன்படுத்தும் டிபெண்டர் ரக வாகனமொன்றில் வந்தவர்களே அவர்கள் மீது திடீரென சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாக பொலிஸார் தகவல் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூடு குறித்து பொலிஸ் அவசர அழைப்பு இலக்கம் மூலம் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து அங்கு வந்த பொலிஸ் வாகனம் மீதும் துப்பாக்சிசூடு நடத்தப்பட்டுள்ளது. அதன் காரணமாக பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்துள்ளார். அப்பிரதேசத்தின் ஆளுங்கட்சி முக்கியஸ்தர் ஒருவரின் ஆதரவாளர்களே துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டதாக ஐக்கிய தேசியக் கட்சியினர் குற்றம் சுமத்துகின்றனர். (ஸ்ரீ-2)




**Sathya Sai Medical Clinic + Pharmacy**

**சத்ய சாய் மெடிக்கல் கிளினிக் + பார்மசி**

*( பருத்தித்துறை பஸ் டிப்போவிற்கு முன்பாக) பருத்தித்துறை*

**விசேட வைத்திய சேவை** Specialist Consultations

செவ்வாய்/வியாழன்/ஞாயிறு-பொதுவைத்திய நிபுணர் (VP)
புதன் கிழமைகளில் பி.ப 4 மணி- மகப்பேறு பெண்ணியல் நோய் நிபுணர் (VOG)
ஒன்றுவிட்ட சனிக்கிழமை பி.ப 3.30 மணி-சத்திரசிகிச்சை நிபுணர் (SURGEON)
ஒன்றுவிட்ட ஞாயிற்றுக்கிழமை பி.ப.4 மணி-ENT Surgeon
மாதத்தில் கடைசி ஞாயிறு பி.ப 4 மணி- தோல் வைத்திய நிபுணர் Skin Specialist

**"ANALYTES" மருத்துவ ஆய்வுகூட சேவை**

சகல வித இரத்த, சல பரிசோதனைகள் தகுதிவாய்ந்த மருத்துவ ஆய்வுகூட உத்தியோகத்தரால் செய்து கொடுக்கப்படும். விசேடமாக P SA,T4,T3,TSH (THYROXINE TEST) ஆய்வுகள் DURDANS LABORATORY SERVICE (கொழும்பு) மூலமாக பெற்றுக் கொடுக்கப்படும்.

(4011) மேலதிக தகவல்களுக்கு:- தொ.பே: 077 3164251


# மரண அறிவித்தல்



திருமதி
**பொன்னு பொன்னம்மா**

உரும்பிராய் மேற்கு, ஞானசம்பந்தர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னு பொன்னம்மா கடந்த (09.03.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆண்டி- வெள்ளைச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு .திருமதி ஆண்டி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பொன்னுவின் அன்பு மனைவியும், தேவன், இராசகமலதேவி (சுவிஸ்), யோகராசா (கனடா), காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சிவலிங்கம் மற்றும் சிவயோகம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயும் தனலட்சுமி, யோகராசா (சுவிஸ்), லதா (கனடா),சின்னமணி, தனலட்சுமி, பாஸ்கரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் றமேஸ், ரேணுகா,-பாஸ்கரன், வினிதா, கஜிதா, கிரிஜா, சிவசர்மன், கௌதமன், நிரூஜன், சிந்துஜன், பிரசாந், மனோஜன், சபீசா ஆகியோரின் பேர்த்தியும், ஜெஸ்மி, லதீபன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று வெள்ளிக்கிழமை 11.03.2011 அவரது இல்லத்தில் நடைபெற்று , பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்,
அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஞானசம்பந்தர் வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.
தொ.பே: 0217901921

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(சி-2612)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானில் பூகம்பத்தையடுத்து ஆழிப்பேரலை அனர்த்தம்!!!




## லிபிய எதிர்க்கட்சித் தலைவரின் தலைக்கு 2 கோடி ரூபா பரிசு



## கடாபி அறிவிப்பு

(மொஸ்கோ)

லிபியாவில் எதிர்க்கட்சி முக்கிய தலைவ ரும் முன் னாள் மத்திரியுமான அப்துல் ஜலீலை பிடித்துக் கொடுப் பவருக்கு ரூ.2 கோடியே 5 இலட்சம் ரூபா பரிசளிப்பதாக ஜனாதிபதி கடாபி அறிவித்துள்ளார்.

லிபியாவில் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி நடத்தி வரும் ஜனாதிபதி கடாபி க்கு எதிராக கடந்த பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி முதல் கடுமையான கிளர்ச்சி நடந்து வருகின்றது. லிபியாவின் ஒருசில நகரங் களை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. எனினும் , கிளர்ச்சியாளர்கள் மீது விமானத் தாக்கு தலை கடாபி நடத்தி வருகிறார்.

இதனால் , இதுவரை 6 ஆயிரம் பேர் கொல்லப்பட்டிருப்பதாக சர்வதேச மனித உரிமைக் குழு தெரிவித்துள்ளது. எனவே , லிபிய இராணுவ அரசு மற்றும் கடாபிக்கு எதிராக கடு மையான நிபந்தனைகளை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் விதித்துள்ளது.

கடாபி மற்றும் அவருடைய குடும்பத்தி னரின் சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி கடாபி மற்றும் குடும்பத்தினருக்கு "விசா " வழங்க ஐரோப்பிய யூனியன் நாடு கள் தடை விதித்திருக்கின்றன.

எனினும் ,கடாபி சோரவில்லை. தற்போது புதிதாக ஒரு அறிவிப்பை வெளியிட்டு இருக் கிறார். அவரை தீவிரமாக எதிர்த்து வரும் எதிர்க்கட்சி முக்கிய தலைவரும் முன் னாள் சட்ட மந்திரியுமான முஸ்தபா அப்துல் ஜலீல் என்பவரைப் பிடித்துத் தருபவருக்கு ரூ.2 கோடியே 5 இலட்சம் ரூபா பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.

அப்துல் ஜலீலை கைதுசெய்ய உதவும் வகையில் "துப்பு" கொடுத்தால் ரூ.82 இலட் சம் வழங்கப்படும். அல்-கொய்தா உள்ளிட்ட தீவிரவாத அமைப்புகளை லிபியாவில் அனு மதிக்காததால் அந்தத் தீவிரவாதிகளே இந் தக் கிளர்ச்சிக்குக் காரணமாக இருப்பதாகவும் லிபியாவின் அமைதியின்மைக்கு அல்-கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடன் பின் னணியில் இருப்பதாகவும் இரண்டு நாட்க ளுக்கு முன் கடாபி குற்றஞ்சாட்டினார்.

இந்த பரபரப்புக்கு இடையே , லிபிய அரச குடும்ப விமானம் ஒன்று எகிப்து நோக்கி இரகசியமாகச் சென்ற தகவல் வெளியாகி உள்ளது. லிபியன் ஏர்லைன்ஸ் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான 'பால்கோன் 900' ரக விமானங்களில் லிபியாவின் மிக முக்கிய தலைவர்கள் மட்டுமே பயணம் செய்வது வழக்கம். அந்த ரக விமானம் ஒன்று , கிரீக் நாட்டின் வான் வழியாகச் சென்றதாக கிரீக் இராணுவ அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

லிபியத் தலைநகர் டிரிபோலியில் இரு ந்து எகிப்து தலைநகர் கெய்ரோ நோக்கி குறித்த விமானம் சென்றது என்றும் விமா னத்தினுள் யார் இருந்தது என்ற விபரம் தெரிய வில்லை என்றும் கிரீக் விமானப் படை அதி காரிகள் கூறினார்கள்.

கிரீக் தீவின் தென்மேற்கு பகுதி வழியாக அந்த விமானம் பறந்து சென்றது. அந்த விமானத்தின் மூலமாக எகிப்துக்கு கடாபி தப்பிச் சென்றாரா? என்பது பற்றி உறுதியான தகவல் இல்லை எனக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)


## தசாகக்கிருஹயக்ஞ அழைப்பிதழ்

### மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள்



அன்புடையீர்! விகிர்தி வருஷம் மாசி மாதம் 20ஆம் நாள் (04.03.2011) வெள்ளிக்கிழமை அமாவாசை திதியில் சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் மஹாராஜஸ்ரீ சு.துரைச்சாமிக்குருக்கள் ஷண்முகநாதக்குருக்கள் அவர்களின் ஆத்மசாந்தி கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

13.03.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு தசாகம்
14.03.2011 திங்கட்கிழமை ஏகோதிட்டம் மாசியம்
15.03.2011 செவ்வாய்க்கிழமை சபிண்டீகரணம்
16.03.2011 புதன்கிழமை கிரகயக்ஞம்

உற்றார், உறவினர்கள், மாவைக்கந்தன் அடியவர்கள், எங்கள் குடும்பத்தின் அபிமானிகள், நண்பர்கள், பொதுமக்கள் இவ் அறி வித்தலை தனிப்பட்ட அழைப்பிதழாக ஏற்று மேற்படி தினங்களில் நடைபெறும் நிகழ்வுகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்மசாந் திக்கான பிரார்த்தனையில் கலந்து 16.03.2011 புதன்கிழமை நடை பெறும் மதிய போஜனத்திலும் பங்குபற்றி சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாவையாதீனம்,
மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்,
மாவிட்டபுரம், தெல்லிப்பழை.
தொ.பே: 021 3210349

இங்ஙனம்,
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்,
மைத்துனர்கள், பேரப்பிள்ளைகள்.

(4010)

## பிரிவுத்துயரில் முதலாம் ஆண்டு நினைவுதினம்

விண்ணில் 12.03. 2010

திதி 12.03. 2011

(3993)

### அமரர் ஐயன் வைரமுத்து



(ஓய்வுபெற்ற காவலாளி யா. மா. சபை)

அறிவில், ஆற்றலில், பாசத்தில் சிறந்த
உள்ளத்தில், உயர்ந்து பல்லோரும் போற்ற வாழ்ந்த
எங்கள் தெய்வத்தின் நினைவாக
ஆத்ம சாந்திக்காக எல்லாம்வல்ல
நாராயணப் பெருமானையும் முருகப் பெருமானையும்
வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் சார்பாக
கந்தையா பரமேஸ்வரன், இலங்கை மின்சாரசபை, வேலணை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் பிழைத்தோர்க்கு
அறம் கூற்றாகும்.
—சிலப்பதிகாரம்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# 15 வருடங்களாக எதிர்க்கின்ற போதும் ரணில் இன்னமும் பதவி விலகவில்லை

## கிண்டல் அடிக்கிறது அரசாங்கம்

(கொழும்பு)

மக்கள் எதிர்ப்பினால் எகிப்திய ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் 15 நாட்களில் பதவி விலகியுள்ளார். ஆனால் 15 வருடங்களாக பாரிய எதிர்ப்பு வந்தும் ஐக்கிய தேசியக் கட்சி தலைவரோ கட்சித் தலைமைத்துவத்தைக் பிடித்துக் கொண்டிருப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கேலியாக குறிப்பிட்டுள்ளார்.

மகாவலி நிலையத்தில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே தினேஷ் குணவர்த்தன மேற்கண்டவாறு கேலி செய்துள்ளார்.

தொடர்ந்து அங்கு கருத்து வெளியிடுகையில்,

ரணில் விக்கிரமசிங்கவும் அவரின் கொள்கையும் இருக்கும் வரை ஐ.தே.கவினால் ஒருபோதும் தேர்தலில் வெற்றியீட்ட முடியாது.

இந்தத் தேர்தலில் ஐ.ம.சு.மு. வெற்றியீட்டும் என்பது ரணிலுக்கு நன்கு தெரியும். மக்களுக்கு சேவையாற்றுவதற்கன்றி ரணிலுக்கும் சஜித்துக்குமிடையிலான அதிகாரப் போட்டியே இந்தத் தேர்தலில் காணப்படுகிறது. இதனால் இருக்கும் உறுப்பினர்களையும் ஐ.தே.கவுக்கு இழக்க நேரிடும்.

ரணில் விக்கிரமசிங்க 19ஆவது தடவையாகவும் இந்தத் தேர்தலில் தோல்வியடைவார். இந்த நிலையிலேயே அவர் அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை அடுக்கி வருகிறார்.

கிராமங்களின் அபிவிருத்திக்கு எமது அரசே அதிகம் பங்காற்றியுள்ளது. மக்களின் பங்களிப்புடன் ஆரம்பிக்கப்பட்ட மூவாயிரத்து 800 கிராமிய நீர்த்திட்டங்கள் நிறைவடையும் நிலையில் உள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

# இறைவனின் சீற்றத்தைத் தணிக்க மனு தர்மத்தைப் பேணுவோம்

இறைவன் சீற்றம் கொண்டுவிட்டான். அவனின் சீற்றம் இயற்கை என்ற பெயரில் உலகை அழிக்க தலைப்பட்டுவிட்டது. அதிலிருந்து விடுபடுவது எப்படியென்று சிந்திப்பதற்குக் கூட, அதர்மத்தின் பெருக்கம் விடுவதாக இல்லை.

எங்கும் அநியாயம், அட்டூழியம், ஊழல் இதனால் ஒரு பகுதி மக்கள் வாழ்வதற்கு ஆதாரம் இல்லாமல் கண்ணீர் வடிக்கின்றனர்.

இதற்கு மேலாக இனத்தால், மதத்தால், மொழியால் இடம்பெறும் அடக்கு முறைகள் எந்தவித அர்த்தமும் இன்றி தாண்டவம் ஆடுகின்றன.

மனு நீதிப்படி ஆட்சி செய்யவேண்டியவர்கள் பக்கம் சார்ந்து தாம் சார்ந்தவர்களின் வாழ்விற்காக மற்றைய இனத்தை வதைக்கின்றனர்.

இத்தகைய அதர்மத்தின் உச்சம் ஊழிக்கூத்தாக மாறி சுனாமி என்றும் பூமி அதிர்ச்சி என்றும் உலகை அழிக்கத் தலைப்பட்டுவிட்டது.

இதனைக் கூறும் போது நீதிக் கொள்கைக்கு –கடவுள் கோட்பாட்டிற்கு எதிரானவர்கள் தர்க்கிக்கவே செய்வார்கள்.

அவர்களின் தர்க்கிப்பு நியாயமற்றது. அதற்கு ஆதாரம் வேண்டும் எனில், உலகம் முழுவதற்கும் தொழில் நுட்பத்தை காட்டிக்கொடுக்கக் கூடிய நாடான ஜப்பான் நேற்று நடந்த பூமி அதிர்விலும் சுனாமியிலும் எல்லாவற்றையும் பறிகொடுத்தது.

இலங்கைக்கு அடிக்கடி வந்து சென்ற இலங்கைக்கான விசேட தூதுவர் அகாஷி விடுதலைப் புலிகளின் தலைவர் தன்னைச் சந்திக்க மறுத்ததற்காக கோபம் கொண்டார்.

அவரின் கோபம் வன்னியில் அப்பாவி தமிழ் மக்கள் அபயம், அபயம் என்று கதறிய போதும் தணியவில்லை.

இலங்கையில் நடந்த யுத்தம் நியாயமானதென்பதை அகாஷியின் அறிக்கைக்கு அமைவாக ஜப்பான் பிரகடனம் செய்தது.

இலங்கையில் நடந்த போர் தொடர்பில் இணைத்தலைமை நாடுகள் விடுக்கவிருந்த அறிக்கையை தடுத்து நிறுத்தியதோடு இணைத் தலைமை நாடுகளையும் கலைத்து மகிழ்வு கண்டது.

அப்போதெல்லாம் 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11ஆம் திகதி மிகப்பெரியதொரு பூமி அதிர்வு, சுனாமி ஜப்பானைத் தாக்கும் என்று எவரும் நினைத்திருக்க மாட்டார்கள்.

எதுவாயினும் இறைவனின் சீற்றத்தை தணிக்க–தடுக்க நலிவுற்றவர்களுக்காக, ஏழை மக்களுக்காக, உரிமைகளை இழந்து வாடும் மானிடத்துக்காக பாடுபடுவோம்; உதவுவோம். அதைத்தான் இறைவன் விரும்புகிறான்.

இறைவனின் விருப்பை நிறைவேற்றுவதைத் தவிர அவன் சீற்றத்தைத் தடுக்க வேறு ஏது வழி?

# யுத்தம் முடிவுற்ற பின் இராணுவ ஆட்சியை நோக்கி இலங்கை

## பாக்கியசோதி சரவணமுத்து குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடந்த கால யுத்தம் முடிபடைந்த பின் அபிவிருத்தியை நோக்கி இலங்கை பயணித்துக் கொண்டிருந்தாலும் மறுபுறத்தில் இராணுவ ஆட்சியைத் தழுவிய, சுயநலவாத மற்றும் ராஜபக்ஷ குடும்பத்தின் ஆட்சியாக காணப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான அமைப்பின் தலைவர் பாக்கியசோதி சரவணமுத்து ஜெனீவாவில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற மனித உரிமைகள் மாநாட்டின் அமர்வின்போது இதனை சுட்டிக் காட்டினார்.

இலங்கையில் பிரச்சினைக்களுக்கான தீர்வு ஒன்றுக்கு தொடர்பில் மனித உரிமைகளை அறிக்கைப்படுத்தும் சர்வதேச பொறிமுறை ஒன்று இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களை மறந்து எதிர்காலம் நோக்கி செல்லலாம் என அரசாங்கம் கூறுகின்ற போதும் முறையான புனர்நிர்மாண மற்றும் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகள் இன்றி கடந்த காலங்களை மறக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கிடையில் இலங்கையில் தற்போது பல அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற போதும் அவை தன்னிச்சையாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களாக காணப்படுவதாகவும் அவை தொடர்பில் மக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படாமல் தன்னிச்சையாக திணிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# தீயணைப்புச் சேவை இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபையின் தீயணைப்பு வாகனத்தில் அவசர திருத்த வேலைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மறு அறிவித்தல் வரை அதனது சேவை தற்காலிகமாக இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ அறிவித்துள்ளார். (ச)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



மக்கட் பெருக்கமோ, ஆற்றல்களோ, செல்வமோ, கல்வியோ, பேச்சுவன்மையோ எதுவும் நிலையானதன்று. தூய்மை, ஆன்மீக வாழ்க்கை– ஒரே சொல்லில் சொல்வதானால்– அனுபூதி (இறைவனை உணர்தல்)– இது ஒன்றே நிலையானது. ஒவ்வொரு நாட்டிலும் ஆன்மீகச் சிங்கங்கள் பன்னிருவராவது உருவாகட்டும்– பந்தங்களை உதறித்தள்ளி, பாசக்கட்டுக்களை அறுத்தெறிந்து அகண்டாகாரத்தைத் தொட்டுப் பார்த்து ஆன்மீகச் சிங்கங்கள் எழட்டும்–பட்டம், பதவிகளுக்கு ஏங்காது, பேரும் புகழும் விரும்பாது, பிரம்மானுபூதியைப் பெற்ற ஆன்மீகச் சிங்கங்கள் கிளர்ந்தெழட்டும். உலகையே அசைக்கவல்ல இவர்களே போதும்.

பின்னால் பார்க்க வேண்டாம். முன்னோக்கிச் செல்லுங்கள். அளவற்ற ஆற்றல், அளவற்ற ஆர்வம், அளவற்ற வலிமை, அளவற்ற பொறுமை–இவை இருந்தாலொழிய செயற்கரிய செயல்கள் செய்தல் இயலாது. இறைவனின் உள்ளக்கிடக்கை இதுவாக இருக்குமானால், அதற்குத் தேவையான மகான் உரிய இடத்தில் வந்து பிறப்பார்.

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## மனம் மாறிய லேவியாக நாம் இருப்போம் (லூக் .5: 27–32)

தவக்காலத்தில் நாம், இழத்தல், ஒறுத்தல், துறத்தல் என்பன பற்றிச் சிந்திக்க இறைவார்த்தை தொடர்ந்து நமக்கு அழைப்பு விடுக்கிறது. இன்றைய நற்செய்தியில் லேவியை இயேசு அழைத்தபோது அவர் அனைத்தையும் விட்டுவிட்டு இயேசுவைப் பின் பற்றிச் சென்றார்.லேவியின் தியாகம் பெரிது, போற்றுதற்குரியது. அவரின் மனமாற்றத்தை இது வெளிப்படுத்துகின்றது. வசதிகளும், செல்வமும் செழிப்பும் நிறைந்த வாழ்வை விட்டுவிட்டு இயேசுவைப் பின் செல்வது என்பது மிகப்பெரியதொரு சவாலாகும். லேவி அதை முழு மனதோடு ஏற்றுக் கொண்டார். இயேசுவை அழைத்து மனமாற்றத்தால் உருவான மகிழ்ச்சியை விருந்து வைத்து கொண்டாடினார். ஏனெனில் லேவி ஒரு ஞானத்தைப் பெற்றிருந்தார். செல்வம் அனைத்தையும் இழந்தாலும், இயேசு என்னும் மாபெரும் செல்வத்தை அவர் பெற்றுக் கொண்டார். கிறிஸ்துவேஒப்பற்றசெல்வம், அவர் முன்பு மற்ற அனைத்தும் குப்பை என்னும் மனநிலை கொண்டிருந்தார். எனவே, மகிழ்ச்சியுடன் தனது அழைப்பைக் கொண்டாடினார்.

அங்கே லேவிக்கு மட்டுமல்ல அவரோடு சேர்த்து அவர்களது நண்பர்களையும் நற்செய்தி சென்றடைகிறது. அவர்களும் மனம்மாறி கடவுளோடு ஒப்புரவாக சந்தர்ப்பம் உருவாகிறது. ஆனால் பரிசேயர்கள் இதைப் பரிகசிக்கின்றார்கள். நாமும் குற்றஞ்சாட்டி, குறைசொல்லி வாழும் பரிசேயத்தனத்தை விட்டுவிடுவோம். நிறைவைக் காணும் முயற்சியிலும், பழம்பெருமை பாடி சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் சமாதி கட்டுவதைத் தவிர்ப்போம், சமபந்தியில் உறவை வளர்க்கும் முயற்சியிலும் இறங்குவோம்.

லேவியாக நாம் இருந்தால், இயேசுவின் ஆசீர் குறைவின்றி நமக்கு நிறைவாகக் கிடைக்கும் பரிசேயப் பண்பு நம்மில் இருந்தால் இயேசு இன்றைய நற்செய்தியில் கூறுவதுபோல் மருத்துவரை அணுக சரியான தருணம் இதுவே. நம் வாழ்வின் செல்வம் எது? உலக செல்வமா?, இன்பமா அல்லது இயேசுவா? லேவியைப் போல அனைத்தையும் விட்டுவிட்டு, இயேசுவை ஏற்றுக் கொள்வோம். நிறைவாழ்வின் விருந்தில் பங்குபற்றுவோம்.

ம. பிரான்சிஸ்,
கத்தோலிக்க சுதந்திர,
பத்திரிகையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் பெரும் போரில் விறு விறு: வெற்றி யாருக்கு? இன்று காலை முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியின் வெற்றிக்கு 6 ஓட்டங்கள் தேவை. யாழ் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் வெற்றிக்கு 2 விக்கெட்டுக்களை கைப்பற்ற வேண்டிய நிலையில் வடக்கின் பெரும்போர் விறுவிறுப்பான கட்டத்தில் இன்று மூன்றாவது நாளாகவும் தொடரவுள்ளது.

வடக்கின் மாபெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரிகளுக்கிடையிலான 105 ஆவது போட்டி நேற்று முன்தினம் வியாழக்கிழமை முதல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வெற்றி பெற்று களத்தடுப்பை முதலில் தீர்மானித்தது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ஜேன்ஸ் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 118 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி தனது முதல் இன்னிங்ஸில் 131 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் 13 ஓட்டங்கள் பின்னிலையில் தனது 2 ஆவது இன்னிங்ஸை துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி முதல் நாள் ஆட்ட நேர முடிபில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 16 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இரண்டாவது நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியின் விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து வீழ்த்தப்பட்டன. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வதுஷனன், ஜெரிக்துஷான் பந்து வீச்சில் மிரட்ட 44 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்து சென்.ஜோன்ஸ் கல்லூரி தடுமாறியது.

எனினும் தொடர்ந்து வந்த துடுப்பாட்ட வீரர்கள் அணிக்கு கைகொடுத்தனர். இறுதி விக்கெட் ஜோடியான ஹரிகரன், டக்ஸன் 55 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

இவர்களின் இணைப்பாட்டத்தினால் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி இரண்டாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 145 ஓட்டங்களை எடுத்தது. துடுப்பாட்டத்தில் டக்ஸன் 56 ஓட்டங்களையும், றஜீந்தன் 45 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் ஜெரிக்துஷன் 5 விக்கெட்டுக்களையும் வதுஷனன் 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 133 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸில் களமிறங்கியது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி. வெற்றியை நோக்கிய துடுப்பாட்டம் ஆரம்பத்தில் பலமாக அமைந்தது. எனினும் 100 ஓட்டங்களை அணி எட்டும்போது அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்தது.

போட்டியின் விறுவிறுப்பில் விக்கெட்டுக்கள் சரிந்தன. அணித்தலைவர் ஜெரிக் துஷன் ஒரு பக்கத்தால் தூண் போல் நின்று அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தார்.

இந்நிலையில் இரண்டாம் நாள் ஆட்டம் முடிபடையும் போது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 8 விக்கெட் இழப்பிற்கு 127 ஓட்டங்கள் எடுத்தது.

துடுப்பாட்டத்தில் ஜெரிக்துஷன் 31 ஓட்டங்களையும் கோகுலன் 20 ஓட்டங்களையும் வதுஷனன் 15 ஓட்டங்களையும் எடின் 11 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக ஹரிவதனன் 4 விக்கெட்டுக்களையும் பிரியதர்சன், டக்ஸன், விமல்ராஜ் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

வெற்றிக்கு 6 ஓட்டங்கள் இன்னும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணிக்கு தேவையென்ற போதிலும் ஆட்டம் எந்நேரத்திலும் மாறக்கூடிய விதத்தில் பந்து வீச்சாளர்களின் கையில் உள்ளது.

# அயர்லாந்து அணியுடன் போராடி வெற்றி பெற்றது மேற்கிந்தியத் தீவுகள்

(மொகாலி)

சிமித், பொல்லாட்டின் சிறப்பான ஆட்டம் கைகொடுக்க மேற்கிந்தியத்தீவுகள் அணி 44 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அயர்லாந்து அணியை வீழ்த்தியது.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் பத்தாவது உலகக் கிண்ணத் தொடர் நடைபெற்று வருகிறது.

இதில் மொகாலியில் நேற்று பகல் ஆட்டமாக நடைபெற்ற 27 ஆவது லீக் போட்டியில் பி பிரிவைச் சேர்ந்த மேற்கிந்தியத்தீவுகள்-அயர்லாந்து அணிகள் மோதின.

இப்போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் கிறிஸ் ஹயிலுக்கு ஓய்வுவழங்கப்பட்டது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அயர்லாந்து அணித் தலைவர் போட்டர்பீல்ட் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு சிமித் -சந்தர்போல் ஜோடி நிதானமான ஆரம்பத்தை வழங்கினர்.

இந்த ஜோடி விக்கெட்டை பாதுகாப்பதில் கவனம் செலுத்தியதால் ஆமை வேகத்தில் ஓட்டங்கள் எடுத்தது.

இதில் சிமித் 82 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். மறுமுனையில் சிவ்நாராயணன் சந்தர்போல் 62 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 35 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க மேற்கிந்தியத்தீவுகள் அணி 24.2 ஓவர்களில் 89 ஓட்டங்களை எடுத்து முதலாவது விக்கெட்டையிழந்தது.

அடுத்து களமிறங்கிய டரன் பிரவோ பூச்சியத்துடன் வந்த வேகத்தில் அரங்கு திரும்பினார்.

தொடர்ந்து வந்த சர்வானும் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து நீண்ட நேரம் நிலைக்கவில்லை.


இந் நிலையில் சிமித்துடன் இணைந்த பொல்லார்ட் அதிரடியாக வேகத்தில் ஓட்டங்கள் குவித்தார்.

மறுமுனையில ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சிமித் 124 பந்துகளில் சதமடிக்க மேற்கிந்தியத்தீவுகள் அணி 40.2 ஓவர்களில் 200 ஓட்டங்களை எட்டியது.

எனினும் சிமித் 133 பந்துகளில் (11 பவுண்டரிகள், ஒருசிக்ஸர் உட்பட) 107 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த அணித்தலைவர் சமி 04, தோமஸ் 02 ஓட்டங்களுடன் வெளியேறி ஏமாற்றமளித்தனர்.

எனினும் மறுமுனையில் அதிரடியாக ஆடிய பொல்லார்ட் 35 பந்துகளில் அரைச்சதம் அடித்தார்.



தொடர்ந்து வானவேடிக்கை காட்டிய பொல்லார்ட் 55 பந்துகளில் (8 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அடங்கலாக) 94 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார்.

இதனால் 06 ஓட்டங்களால் அதிவேக சதமடிக்கும் வாய்ப்பை நழுவ விட்டார்.

இறுதியில் மேற்கிந்தியத்திவுகள் அணி 50 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 275 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் கெவின் ஓ பிரையன் 4 விக்கெட்டுக்களையும் மோனி 2 விக்கெட்டுக்களையும் ராங்கின், போத்தா, டொக்ரல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 276 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணிக்கு ஆரம்பம் கைகொடுக்கவில்லை.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஸ்ரிலிங் 5, அணித்தலைவர் போர்டர் பீல்ட் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர்.

அடுத்து மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த ஜொய்சி-நெய்ல் ஓ பிரைன் ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வழங்கி அணியை சரிவிலிருந்து மீட்டனர்.

இதில் நெய்ல் ஓ பிரைன் 31 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 25 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழக்க அயர்லாந்து அணி 21 ஓவர்களில் 86 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களையிழந்தது.

இந்நிலையில் ஜொய்சியுடன் இணைந்த வில்சன் அற்புதமான ஆட்டத்தை வழங்கி ஆறுதலளித்தார்.

இதில் ஜொய்சி 67 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். இந்த ஜோடி நான்காவது விக்கெட்டுக்காக 91 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்தபோது ஜொய்சி 106 பந்துகளில் (9 பவுண்டரிகள் அடங்கலாக) 84 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட கெவின் ஓ பிரைன் 5 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அடுத்து குஷாக் களமிறங்க மறுமுனையில் வில்சன் 52 பந்துகளில் அரைச்சதம் பெற்றார்.

எனினும் வில்சன் 62 பந்துகளில் (6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸ்சர் உட்பட) 61 ஓட்டங்களை எடுத்து சமியின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்தர்.

ஆனால் தனது ஆட்டமிழப்பு தவறானது என வில்சன் முறையீடு செய்தும் கைகூட வில்லை.

பின்வரிசை வீரர்கள் சோபிக்காத நிலையில் அயர்லாந்து அணி 49 ஓவர்களில் 231 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன் மூலம் 44 ஓட்டங்களால் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி 6 புள்ளிகளுடன் காலிறுதி வாய்ப்பை தக்கவைத்தது.

பந்துவீச்சில் பென் 4 விக்கெட்டுக்களையும் சமி 3 விக்கெட்டுக்களையும் ஏசேல், ரோச் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இப் போட்டியில் அதிரடியால் அணியை வெற்றிபெறச்செய்த பொல்லார்ட் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 – ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

## பின்வரிசை வீரர் துணிச்சல் ஆட்டம்

# பங்களாதேஷ் அணி 'திரில்' வெற்றி இங்கிலாந்துக்கு மீண்டும் அவமானம்



(சிட்டக்கொங்)

பரபரப்பான லீக் ஆட்டத்தில் இங்கிலாந்து அணியை 2 விக்கெட்டுக்களால் வீழ்த்தி காலிறுதி வாய்ப்பை தக்கவைத்தது பங்களாதேஷ்.

ஒரு கட்டத்தில் 8 விக்கெட்டுக்களையிழந்து பங்களாதேஷ் அணி தத்தளித்த போதும் பின் வரிசை வீரர்கள் 58 ஓட்டங்களை சேர்த்து வெற்றி பெறச் செய்தனர்.

பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகிறது.

இதில் சிட்டக்கொங்கில் நேற்று நடைபெற்ற 28ஆவது லீக் போட்டியில் பி பிரிவைச் சேர்ந்த பங்களாதேஷ்–இங்கிலாந்து அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணித்தலைவர் சகிப் அல் ஹசன் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு ஸ்ரொரஸ்–பிறிர் ஆரம்பம் வழங்கினர்.

இதில் பிறிர் 15 ஓட்டங்களுடனும் அணித்தலைவர் ஸ்ரொரஸ் 18 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 10.3 ஓவர்களில் 39 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களையிழந்தது.

அடுத்து மூன்றாவது விக்கெட்டுக்காக திரோடடன் இணைந்த பொல் 05 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சொதப்பினார்.

இந் நிலையில் திரோட்டுடன் இணைந்த மோர்கன் சிறப்பான ஆட்டத்தை வழங்கி நம்பிக்கையளித்தார்.

இந்த ஜோடியின் விவேகமான ஆட்டத்தின் மூலம் இங்கிலாந்து அணியின் விக்கெட் சரிவைத் தடுத்தது.

இதில் மோர்கல் 60 பந்துகளிலும் திரோட் 78 பந்துகளிலும் அரைச்சதம் கடந்து ஆறுதலளித்தனர்.

இந்த ஜோடி நான்காவது விக்கெட்டுக்காக 109 ஓட்டங்களை இணைப்பாட்டமாகச் சேர்த்த போது மோர்கன் 73 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 63 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ரவிபொப்ரா களமிறங்க மறுமுனையில் பொறுப்பாக ஆடிய திரோட் 99 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 67 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் ரவிபொப்ரா 16, சுவான் 12, பிரேஸ்னன் 2 ஓட்டங்களுடன் வரிசையாக ஆட்டமிழந்து நடையைக்கட்ட இங்கிலாந்து அணி 49.4 ஓவர்களில் 225 ஓட்டங்களை எடுத்து சகலவிக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் கொலின்வூட் 14 ஓட்டங்களை எடுத்தார்.

பந்து வீச்சில் நயிம் இஸ்லாம், அப்தூர் ரஷாக், அணித்தலைவர் சகிப் அல் ஹசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சகிபுல் இஸ்லாம், ருபேல் ஹுசைன், மாமுடுல்லா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 226 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு தமிம் இக்பால்–இம்ரூல்ஹைறஸ் ஜோடி அதிரடி ஆரம்பத்தை வழங்கினர்.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 8.4 ஓவர்களில் 52 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது தமிம் இக்பால் 26 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 38 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய ஜுனைட் சிட்டிக் 12 ஓட்டங்களுடன் ரன்–அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த ரகிபுல் ஹசன் பூச்சியத்துடன் வெளியேற பங்களாதேஷ் அணி 13.4 ஓவர்களில் 73 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களையிழந்து தடுமாற்றம் கண்டது.

எனினும் 4 ஆவது விக்கெட்டுக்காக இம்டுல் ஹைறஸுடன் இணைந்த அணித்தலைவர் சகிப் அல் ஹசன் நிதானமாக ஆடி விக்கெட் சரிவைத்தடுத்தார்.

இதில் இம்ருல் ஹைறஸ் 91 பந்துகளில் அரைச்சதம் பெற்று ஆறுதலளித்தார்.

இந்த ஜோடி 4ஆவது விக்கெட்டுக்காக 82 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்தபோது இம்ருல் ஹைறஸ் 100 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 60 ஓட்டங்களை எடுத்து பரிதாபமாக ரன்–அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து முஸ்பிகுர் ரகீம் களமிறங்க மறுமுனையில் அணித்தலைவர் சகிப் அல் ஹசன் 58 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 32 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து முஸ்பிகுர் ரகீம் 06 ஓட்டங்களுடனும் நயிம் இஸ்லாம் பூச்சியத்துடனும் அப்தூர் ரஷாக் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்க பங்களாதேஷ் அணி 39.4 ஓவர்களில் 169 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 8 விக்கெட்டுக்களையிழந்து நிலைகுலைந்தது.

கடைசிக் கட்டத்தில் மாமுல்லாவுடன் இணைந்த ஹசியுல் இஸ்லாம் துணிச்சலாக போராடினார்.

சுவான் வீசிய 42ஆவது ஓவரில் மாமுடுல்லா ஒரு பவுண்டரி, ஷபியுல் இஸ்லாம் ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் அடிக்க ஆட்டம் சூடு பிடித்தது.

46 ஆவது ஓவரில் அண்டர்சன் அகலப்பந்துகளாக ஓட்டங்களை வாரிவழங்க பங்களாதேஷ் அணிக்கு 11 ஓட்டங்கள் சேர்ந்தது. இது போட்டியின் திருப்பு முனையாக அமைந்தது.

இந்த ஜோடி இறுதிவரை போராட பங்களாதேஷ் அணி 49 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 227 ஓட்டங்களைக் குவித்து 2 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது.

இதில் ஷகிபுல் இஸ்லாம் 24 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் உட்பட) 24 ஓட்டங்களையும் மாமுடுல்லா 21 ஓட்டங்களையும் ஆட்ட மிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் அஜ்மல் ஷேசாட் 3 விக்கெட்டுக்களையும் சுவான் 2 விக்கெட்டுக்களையும் பிரேஸ்னன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் பங்களாதேஷ் அணியின் வெற்றிக்கு அடித்தளம் அமைந்த இம்ருல் ஹைறஸ் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் பங்களாதேஷ் அணி தான் விளையாடிய 4 போட்டிகளில் 2ஆவது வெற்றியைப் பதிவசெய்து 4 புள்ளிகளுடன் காலிறுதி வாய்ப்பை தக்க வைத்தது.

இதேவேளை கத்துக்குட்டி அணியிடம் வீழ்ந்த இங்கிலாந்து அணி தற்போது பங்களாதேஷ் அணியிடம் அதிர்ச்சித்தோல்வி யைச்சந்தித்தது. இன்னொரு அவமானத்தை சந்தித்துள்ளது.

## புள்ளிப் பட்டியல்

ICC Cricket World Cup 2011

### பிரிவு A

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை | 5 | 3 | 1 | 0 | 1 | 7 | +2.705 |
| நியூசிலாந்து | 4 | 3 | 1 | 0 | 0 | 6 | +1.848 |
| பாகிஸ்தான் | 4 | 3 | 1 | 0 | 0 | 6 | +0.760 |
| அவுஸ்திரேலியா | 3 | 2 | 0 | 0 | 1 | 5 | +1.813 |
| சிம்பாவே | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -0.690 |
| கனடா | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -2.083 |
| கென்யா | 4 | 0 | 4 | 0 | 0 | 0 | -3.403 |

### பிரிவு B

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| இந்தியா | 4 | 3 | 0 | 1 | 0 | 7 | +0.992 |
| மேற்கிந்தியத் தீவுகள் | 4 | 3 | 1 | 0 | 0 | 6 | +2.206 |
| இங்கிலாந்து | 5 | 2 | 2 | 1 | 0 | 5 | +0.013 |
| தென்னாபிரிக்கா | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | +1.754 |
| பங்களாதேஷ் | 4 | 2 | 2 | 0 | 0 | 4 | -1.241 |
| அயர்லாந்து | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -0.444 |
| நெதர்லாந்து | 4 | 0 | 4 | 0 | 0 | 0 | -2.728 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஊழல்

# கனிமொழி, தயாளு அம்மாளிடம் புலனாய்வுக் கழகம் விசாரணை

(சென்னை)

ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஊழல் விவகாரம் தொடர்பாக தமிழக முதலமைச்சர் கருணாநிதியின் மகளும் நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழியிடம் மத்திய புலனாய்வுக் கழகம் நேற்று விசாரணை நடத்தியது.

அதேவேளை தமிழக முதலமைச்சர் கருணாநிதியின் மனைவி தயாளு அம்மாளிடமும் மத்திய புலனாய்வுக் கழகம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

தி.மு.க. தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் அமைந்துள்ள கலைஞரின் தொலைக் காட்சி அலுவலகத்தில் வைத்து கனிமொழியிடம்மத்தியபுலனாய்வுக் கழக அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இவ் விசாரணைகளை அடுத்து தயாளு அம்மாளிடமும் மத்திய புலனாய்வுக் கழக அதிகாரிகள் கலைஞர் தொலைக்காட்சி அலுவலகத்தில் வைத்து விசாரணைகளை நடத்தினர்.

கலைஞர் தொலைக்காட்சியின் பங்குதாரர்கள் என்ற வகையில் கனிமொழியிடமும், தயாளு அம்மாளிடமும் மத்திய புலனாய்வுக் கழக அதிகாரிகள் நேற்று விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

டெல்லியிலிருந்து சென்ற மத்திய புலனாய்வுக் கழகத்தின் இரு பெண் அதிகாரிகள் உட்பட நன்கு அதிகாரிகள் இவ் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கலைஞர் தொலைக் காட்சியில் கனிமொழிக்கு 20 சதவீதப் பங்குகளும், தயாளு அம்மாளுக்கு 60 சதவீதப் பங்குகளும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச-5)

# ஜப்பானை அடுத்தடுத்து...

ஜப்பானின் வட்கிழக்குப் பகுதியை நேற்று மிகப் பயங்கரமான பூகம்பம் தாக்கியதை அடுத்து உருவான சுனாமிப் பேரலை பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

சுனாமிப் பேரலையால் இலட்சக் கணக்கான வீடுகளும், வாகனங்களும் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக சர்வதேசச் செய்தி ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஜப்பானின் தலைநகரமான போக்கியோவிலிருந்து 400 கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஒஹறாமா மாகாணத்தில் மியாகி என்ற இடத்திற்கு அருகே பசிபிக் கடலில் இந்த நிலநிடுக்கம் ஏற்பட்டதாகவும், கடலுக்கடியில் 30 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் உருவானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரிக்டர் அளவுகளில் 8.9 புள்ளிகளாகப் பதிவான இந்த நிலநடுக்கத்தை அடுத்து மியாகி கடலோரப் பகுதி உட்பட ஜப்பானின் பெரும்பாலான கடலோரப் பகுதிகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதையடுத்து பெரும்பாலான கடலோரப் பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்த அடுத்த சில மணித்தியாலங்களில் 13 அடிய உயரமுள்ள மிகப் பயங்கர அலைகள் கடலோரப் பகுதிகளில் புகுந்தன.

தப்பியோடக் கூட முடியாத அளவிற்கு கடலோரப் பகுதிகளை சுனாமி அலைகள் அடுத்தடுத்துத் தாக்கி நகர்களுக்குள் புகுந்து வீடுகளைத் தரைமட்டமாக்கியதுடன் வீடுகளின் இடிபாடுகளையும் இலட்சக்கணக்கான வாகனங்களையும் அந்த அலைகள் அடித்து கடலுக்குள் இழுத்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை தொடர்ந்து பயங்கர அலைகளின் தாக்கத்தினால் கடலிலிருந்த ஏராளமான கப்பல்கள் மற்றும் படகுகளும் நிலப் பகுதிக்குள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

முன்னதாக இந்த நிலநடுக்கத்தால் போக்கியோ உட்பட ஜப்பானின் பெரும்பாலான பகுதிகளில் கட்டடங்கள் பயங்கரமாகக் குலுங்கி, ஏராளமான கட்டங்கள் தரைமட்டமாகியதை அடுத்து கடலோரப் பகுதிகளை சுனாமி அலைகள் தாக்கின.

அத்துடன் அலைகள் நகர்களுக்குள் புகுந்தபோது பல எரிவாயுக் குழாய்கள் உடைந்து தீப்பிடித்துக் கொண்டுஆங்காங்கேபயங்கரவெடி விபத்துக்களும் ஏற்பட்டன. இந்த நிலநடுக்கம் ஏற்பட்ட இடத்திலிருந்து 400 கிலோமீற்றர் தூரத்திற்கும் கூட எரிவாயுக் குழாய்கள் சேதமடைந்து வெடி விபத்துக்கள் ஏற்பட்டு தீ விபத்துக்களும் ஏற்பட்டுள்ளன. இதனால் நாட்டின் பல பகுதிகள் புகை மண்டலமாகக் காட்சியளிக்கிறது.

இந்த நிலநடுக்கத்தை அடுத்து ஜப்பானின் பெரும்பாலான விமான நிலையங்கள் மூடப்பட்டு விட்டன. ஜப்பானை நோக்கிச் சென்ற அனைத்துக் கப்பல்களும் நடுக்கடலிலேயே நிறுத்தப்பட்டுவிட்டன. நாடு முழுவதும் புகையிரதங்களும் நிறுத்தப்பட்டுவிட்டன.

செண்டாய்நகர் உள்ளிட்ட வடக்கு ஜப்பானின் பெரும்பாலான கடலோரப் பகுதிகளும் நீரில் மூழ்கியுள்ளன. செண்டாய் நகர விமானநிலையம் முற்றாக அழிந்துபோய்விட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தப் பூகம்பம் மற்றும் சுனாமி அலைகளால் பலர் காயமடைந்துள்ளதாகவும் இதுவரை 300 பேர் உயிரிழந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்ற போதிலும் பெருமளவு உயிரிழப்புக்கள் இருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போக்கியோவில் நாடாளுமன்றமும் பயங்கரமாகக் குலுங்கியதை அடுத்து அங்கிருந்த அனைவரும் வெளியேற்றப்பட்டனர். ஜப்பானின் ஐந்து அணு மின் நிலையங்களும் மூடப்பட்டு விட்டன. இதனால் நாடு முழுவதும் மின் தடையும் ஏற்பட்டுள்ளது. நாடு முழுவதும் தொலைபேசித் தொடர்புகள் முற்றிலும் செயலிழந்துவிட்டன.

இந்நிலையில் நிவாரணப் பணிகளில் ஜப்பானின் முப் படையினரும் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக சர்வதேசச் செய்தி ஸ்தாபனங்கள் தெரிவிக்கின்றன.

ஜப்பானை தொடர்ந்து ரஷ்யா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, அமெரிக்காவுக்குச் சொந்தமான ஹவாய் தீவுகள், தைவான், மெக்சிகோ, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, மார்கஸ் தீவு மற்றும் வடக்கு மரியானா உள்ளிட்ட நாடுகளுக்கும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

(ச-5)

# தமிழ்க் கைதி...

நீதியமைச்சர் அவர்கள் வழங்கிய உறுதிமொழியை நடைமுறைப் படுத்த வேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகளின் அவலநிலையை பெரும்பான்மைச் சிங்கள மக்களிடம் தெரியப்படுத்த அவர்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி கைதிகளின் விடுதலைக்காக ஒத்துழைப்பு வழங்க வேண்டும் போன்ற கோரிக்கைகள் சிறைச்சாலைக் கைதிகளால் முன் வைக்கப்பட்டது.

(ச-5)

# ஐ.நா. சபையுடன் இரக...

உண்மைகளை மறைத்து தேசத்துரோக செயல்களில் ஈடுபடுவது அரசாங்கமே தவிர ஐ.நாவோ, சர்வதேசமோ அல்ல.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக் காலப்பகுதியில் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் இடம்பெற்றுள்ளது எனக் கூறி அதனை ஆராய ஐ.நா. விசேடநிபுணர் குழுவொன்றை அமைத்தது. இந்த நிபுணர் குழுவிற்கு எதிர்ப்புத் தெரிவித்த இலங்கை அரசு ஐ.நா நிபுணர் குழுவை நாட்டிற்குள் வர அனுமதிக்கப் போவதில்லை எனக் கூறியது.

மேற்படி நிபுணர் குழு இலங்கைக்கு வராமலேயே தமது விசாரணைகளை மேற்கொண்டு இறுதி அறிக்கையை ஐ.நா செயலருக்கு வழங்கியுள்ளது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் இலங்கைக்கான ஐ.நாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் பாலித கோஹன, வெளிவிவகார அமைச்சின் செயலாளர்கள் உட்பட அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் இரகசியமாக ஐ.நா தலைவர்களுடன் மேற்கொண்ட சந்திப்புக்கள் பாரிய சந்தேகத்தை ஏற்படுத்துவதோடு நாட்டின் இறையாண்மைக்கு பாரிய அச்சுறுத்தலை தோற்றுவித்துள்ளது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் போர்க் குற்றத்தின் அடிப்படையில் இலங்கையை மண்டியிட வைக்கும் நிபுணர் குழுவுடன் ஏன் ஆளும் தரப்பு இரகசிய சந்திப்பை நடத்தவேண்டும்? சந்திப்புத் தொடர்பாக வெளிப்படைத்தன்மையை பேணாது நாட்டு மக்களுக்கு எதற்காக உண்மையை மறைக்கவேண்டும்? பான் கீ மூனின் நிபுணர் குழுவை மக்கள் நிராகரித்துவிட்டனர். இந்நிலையிலே அரசு அக் குழுவுடன் இரகசிய உறவுகளை வைத்திருப்பது உள்நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விடயமாகும்.

இவ்வாறான செயற்பாடுகளால் அரசாங்கம் மீது நம்பிக்கை வைக்க முடியாத நிலையே உள்ளது. இலங்கையில் வீர முழக்கத்தையும், சர்வதேசத்திடம் மண்டியிடும் தன்மையையுமே இவ் அரசாங்கம் கொண்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ச-5)


## காணி விற்பனைக்குண்டு

மானிப்பாய் சந்தியில் இருந்து 100 M தொலைவில் சுந்தர்சன் நிறுவனத்திற்கு அருகில் 2 பரப்புக் காணியும், நவாலி வடக்கு அட்டகிரி பாடசாலை, அட்டகிரி முருகன் கோயிலுக்கு அருகாமையில் 6 பரப்புக் காணி வீட்டுடனும் விற்பனைக்கு உள்ளன. உடன் தொடர்பு கொள்ளவும்.

T.P.: 021 4908147, 0750412876

(4013)


# விடுதலைப்புலிக...

திட்டங்கள் விளம்பரப் பலகையில் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இல்லாத அச்சுறுத்தல்களை கூறி, அவற்று தாம் மாத்திரமே முகம் கொடுக்கமுடியும் என மக்களுக்கு காரணத்தைத் தெரிவிப்பதே பிரதமரின் பொறுப்பற்ற கருத்தின் நோக்கம். இந்தியா இலங்கையின் பிரச்சினைகளில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தலையிடுவது உண்மை என்ற போதிலும் இறுதிக் கட்ட போரில் இந்தியா தலையிடவில்லை என்பதாலேயே விடுதலைப் புலிகளை தோற்கடிக்க முடிந்தது எனவும் லக்ஷ்மன் கிரியல்ல குறிப்பிட்டுள்ளார்.

(ச-5)

# முஸ்லிம் மக்க...

பிரதேச செயலாளர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம், உண்ணாவிரதம் இடம்பெற்ற பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டு வழங்கிய உறுதிமொழியை அடுத்தே குறித்த உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் மீள் குடியேற்றப்பட்டுள்ள முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்ட உணவு விநியோக முத்திரை நிறுத்தப்பட்டமை, கொடுப்பனவுகள் வழங்கப்படாமை, அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் நேரில் வந்து பார்வையிடாமை மற்றும் யாழ். பொம்மைவெளி பிரதேசத்தில் அமைந்துள்ள மதுபான சாலை மூட வேண்டும் போன்ற பல கோரிக்கைளை முன்வைத்து உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் சுழற்சி முறையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட மேற்படி மக்களை அரச உயர் அதிகாரிகள் யாரும் பார்வையிடாமையால் நேற்று முன் தினம் வியாழக்கிழமை முதல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

கடந்த வருட நடுப்பகுதி முதல் யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் மீளக் குடியேற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ச-5,6)

# பிரபாகரன் கேட்ட ...

விக்கிரமபாகு கருணாரட்ண வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கு ஆயுத ரீதியில் போராடிய முறையை விமர்சிக்கவும், நிராகரிக்கவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு உரிமையுண்டு. ஆனால் தமிழ் மக்கள் தொடர்பாக பிரபாகரன் கேட்ட உரிமைகளை அவர் நிராகரிக்க முடியாது.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும்போது பிரபாகரன் கேட்ட உரிமைகளைக் கேட்க முடியாதென்பதால் அவர்கள் தண்ணீர் அருந்தும் உரிமை, உணவை உண்ணும் உரிமை, மூச்சு விடுவதற்கு உரிய உரிமைகளையே கேட்க முடியும். அதைத்தான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சித் தரப்பு எதிர்பார்க்கிறதா? என விக்கிரமபாகு கருணாரட்ண கேள்வி எழுப்பினார்.

(ச-6)


கொழும்பு பல்கலைக்கழக BIT
கற்கை நெறியினை கற்கும் மாணவர்களுக்கு அரிய வாய்ப்பு

மாணவர்கள் உயர்ந்த பெறுபேறுகள் பெறுவதற்கு உத்தரவாதம்

தனிப்பட்ட கவனத்துடனான விரிவுரைகள்

2, 4 ம் தவணைகள்

ஆரம்பம் - 12-03-2011 சனிக்கிழமை காலை 10.00 மணி

BIT CORNER

Professional ICT Education




தொடர்புகளுக்கு:
14, பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி,
யாழ்ப்பாணம்
0776621745

(C-2675)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org